

# ரமணோதயம்

ஜூலை 2014
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



ஸ்ரீரமணாச்ரம தலைவர் திரு. வே.சு.ரமணன்-
திருமதி. சுசீலா ரமணன் தம்பதியர்
சதாபிஷேக வைபவம் 13-6-2014



உதயம் 13 ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணைவிஜய இதழ்

ஜூலை 2014

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஶ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஶ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணைவிஜய இதழ், ஜூலை 2014


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | சித்-சக்தி | - நொச்சூர் வெங்கடராமன் | 15 |
| 3 | உலகம் உண்மையா? | - கீதா ரவிச்சந்திரன் | 17 |
| 4 | ஏக பில்வம் ரமணார்ப்பணம் | - பிர. கிரிதர ஜெகதீஷ் | 24 |
| 5 | திடஞானி தரிசனமே தேவ பூஜை | - சு. பரமேஸ்வரன், கோவை | 33 |
| 6 | ஜே.கே. நோக்கில் ஆத்ம விசாரம் | | 42 |
| 7 | ஸ்ரீ ரமணர் யார்? | - டாக்டர். ராமகிருஷ்ணன் | 48 |
| 8 | மனித குலத்தை நேசித்த விஞ்ஞான ரிஷிகள் | - பாமதி மைந்தன் | 54 |
| 9 | இனிவரும் திருநாட்கள் - 2014 | | 64 |
| 10 | ரிபுகீதை | - தியாகராஜன் | 65 |
| 11 | வெங்கிட்டு - ஒரு சகாப்தம் | | 73 |
| 12 | சுவாமி ரமணானந்தா - ஆகுரா | | 76 |
| 13 | செய்திகள் | | 79 |

# ஆசிரியர் உரை

## கண்ணாடி போலக் கலந்திருத்தல்

*திருமந்திரத்தில் ஓர் அழகான பாடல்.*

*எண்ணாயிரம் ஆண்டு யோகம் இருப்பினும்*
*கண்ணார் அமுதனைக் கண்டறிவாரில்லை*
*உள் நாடி ஒளி பெற உள்ளே நோக்கின்*
*கண்ணாடி போலக் கலந்து நின்றானே (திருமந்திரம்-603)*


*பல ஆயிரம் ஆண்டுகள் யோக சாதனையில் ஆழ்ந்திருந்தாலும் அந்த வெறும் ஹடயோக சாதனையால் மட்டும் இறைவனைக் காணல் இயலாது. 'நான் யார்' என்ற உள்முக நாட்டத்துடன், ஆன்ம ஒளி பெற இதயத்துள்ளே ஆழ்ந்தால் மாசுமறுவற்ற கண்ணாடிபோல அவனைக் காணலாம் என்கிறார் திருமூலர்.*

*மாசுமறுவற்ற கண்ணாடி போன்றது உபாதி நீங்கிய மனம். அந்தக் கண்ணாடி முன் எது வந்தாலும் அது பிரதிபலிக்கப்படுகின்றது. அது போனபின் மீண்டும் கண்ணாடி வெறுமை ஆகிவிடுகிறது. இது எதையும் பற்றிக் கொண்டு இருப்பதில்லை. அது நிகழ்காலத்திலேயே இருக்கிறது. எது அதன்முன் வந்தாலும் அதைப் பிரதிபலிக்கிறது. அது போன பின்னர் கண்ணாடி வெறுமையாக உள்ளது. அதில் ஒன்றும் விட்டுச் செல்லவில்லை. அத்தகைய ஞானத்தில் வாழ்பவன் கணத்துக் கணம் வாழ்கிறான். புத்தர் இதை 'க்ஷணிகவாதம்' என்று குறிப்பிடுகிறார்.*

*கண்ணாடி போன்ற தன்மையுடன் மனம் நின்றுபோய் விட்ட நிலையில் ஆத்ம சாட்சாத்காரம் பெற்ற குருநாதர் அருகாமையில் நாம் செல்லும்போது அவர் நம்முள்ளே நிரம்பி, நம்மில் ஆழ்ந்த மையம் கொண்டு, நம்முள் நிரம்பி விடுவார்.*

*உலகம் உன்னைச் சுற்றி உள்ளது. மற்றவர்கள் பாதிப்பு உள்ளது. ஏனைய பொருட்களின் மனிதர்களின் தொடர்பால் மனம் உண்டாக்கும் நரகம் இது. எப்படி இதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வது? வேதாந்தம் சொல்கிறது "நீ மறைந்துவிடுவாய்!" நீ அங்கே இல்லாதபோது, ஏனையோரும் இல்லை, ஏனைப் பொருட்களும் இல்லை, உலகமும் இல்லை. உலகப் பொருட்களின் தொடர்பான ஆசையும் இல்லை. நீ நீயாக இருப்பதால்தான் மற்றையோரும் அங்கு இருக்கிறார்கள். உங்கள் தன்முனைப்பு அதிகரிக்க அதிகரிக்க மற்றவர்களும் அங்கு அதிகரித்துத் தோன்றுவர். இந்த நான் என்னும் தன்முனைப்பு இல்லாதபோது, நாம் முழுமையாகிறோம். நானும், மற்றவரும், உலகப் பொருள்கள் அனைத்தும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டவர் அல்ல. பிரிவு இல்லேயேல் பயம் இல்லை. ஆசை இல்லை. இதுவே ராமானுஜருக்குத் திருக்கோஷ்டியூர் நம்பி தந்த உபதேசம். 'நான் போனபின் வா'."*

*இந்த அறிவு உதித்தபின் முயற்சி ஏதும் இல்லாமல் நீங்கள் சாட்சி பாவத்திலேயே உள்ளீர்கள். 'நான் சாட்சியாக உள்ளேன்' என்ற எண்ணமும் மறைந்து விடுகிறது. சீன தத்துவ ஞானி லாவோட்ஸே கூறுகிறார். "நான் மிகவும் கடினமாக முயற்சி செய்தேன். ஆனால் மீண்டும் மீண்டும் அதிர்ஷ்டவசமாகத் தோல்வி அடைந்தேன். எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. நான் பின்னர் உணர்ந்தேன் - நான் யாருக்கு எதிராகப் போராடுகிறேன்? நான்எனக்கு எதிராகவே, என் தன்முனைப்புக்கு எதிராகவே போராடிக் கொண்டு*



சுவாமி ராமதீர்த்தர்

இருந்தேன். நான் இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதி என்று உணர்ந்ததும், நான் தனியாக இல்லை என்று உணர்ந்ததும் இந்தப் பிரபஞ்சம் என்னுள் சுவாசிக்கிறது, என்னுள் வாழ்கிறது. நான் கொண்ட பேத யுத்தம் நின்றுவிட்டது. நான் ஒரு காய்ந்த சருகு போன்று ஆனேன். நான் காய்ந்த சருகாக ஆனபின் எல்லாவற்றையும் அடையப் பெற்றுவிட்டேன். இனி அடைய வேண்டியது எதுவுமே இல்லை. பேரானந்தம் என்னுள் நிலைபெற்று விட்டது." காய்ந்த சருகுக்கு எந்த நோக்கமுமே இல்லை. காற்றினால் அது தூக்கப்பட்டு உயர்ந்தாலும் அதற்கு மமதை இல்லை. பின்னர் கீழே விழுந்தாலும் வருத்தம் இல்லை. அது நோக்கம் கடந்த நிலையில் உள்ளது.

சென்ற நூற்றாண்டில் இருந்த இந்திய தத்துவ ஞானி சுவாமி ராமதீர்த்தர். இவர் பிட்சை எடுத்து உண்டபின்னும் தன்னை 'அரசன் ராம்' என்று அழைத்துக் கொள்வார். இந்தியாவில் இது வழக்கமே. துறவிகளை நாம் 'மஹராஜ்' என்றே அழைக்கிறோம். ராமதீர்த்தர் அமெரிக்கா சென்று

*இருந்தபோது, அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அப்போது தன்னை 'அரசன் ராம்' என்றே அழைத்துக் கொண்டார். 'இது அரசன் ராமின் கருத்து' என்று கூறுவார். அமெரிக்க ஜனாதிபதி பணிவுடன் வினவினார்: 'நீங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லையே. உங்களுக்கு ராஜ்யம் எதுவும் இல்லையே! பின் ஏன் உங்களை "அரசன் ராம்" என்று அழைத்துக் கொள்கிறீர்கள்?'*

*ராமதீர்த்தர் பதில் கூறினார்: 'அதனால்தான் நான் என்னை அரசன் என்று அழைத்துக் கொள்கிறேன். ஏனெனில் என்னிடம் இழப்பதற்கு ஒன்றும் இல்லை. என் ராஜ்யம் அழிவற்றது; அதை என்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது. அது ஆத்ம சாம்ராஜ்யம். உங்கள் பதவி பறிக்கப்படலாம். ஆனால் என் பதவியை யாரும் பறிக்க முடியாது. என்னிடம் இழப்பதற்கு ஒன்றும் இல்லை. என்னிடம் ஆசைகள் இல்லாததாலேயே நான் அரசனாக உள்ளேன்.'*

*இந்தியாவில் துறவிகள் 'ஸ்வாமி' என்று அழைக்கப் படுகின்றனர். சுவாமி என்றால் கடவுள், அரசன் என்று பொருள். ஒருவன் எல்லாவற்றையும் துறந்து எதையுமே தனது உடைமை என்று சொந்தம் கொண்டாடுவதை, நிறுத்தியபின் அவன் 'சுவாமி' ஆகிவிடுகிறான். ஆசை நீங்கியவனே அரசன்.*

*ஆசையின் விளைவால் பற்றுக்கள் ஏற்படுகின்றன. மனக் குழப்பம் ஏற்படுகின்றது. ஆசை நிறைவேறியபின் அது பேராசையாக உருவெடுக்கிறது. ஆசை நிறைவேறுவதில் தடை ஏற்படும்போது கோபம் வெறுப்பு போன்ற எதிர்மறை உணர்ச்சிகள் தோன்றுகின்றன. மனதின் ஒருமுனைப் பாங்கு சீர்கெட்டு பர வாழ்வும், இக வாழ்வும் சிதைவுறுகின்றன.*

*ஆசைகளை அழிக்க, சம்பிரதாயமான சமயங்கள் கூறும் வழி, ஆசை துன்பத்தை விளைவிப்பதால்*

ஆசையை அடக்கு என்பதே. மனோ தத்துவத்தையும் கடந்த பகவானின் விஞ்ஞானபூர்வமான அறிவுரை, 'ஆசையை அடக்கு' என்று மட்டும் கூறாது, ஆசை யாருக்கு எழுகின்றது என்பதை ஆத்ம விசாரம் மூலம் விசாரித்து அறிவாய். அப்போது அகந்தை எழுவதாலேயே ஆசைகளும் எழுகின்றன என்பதை அறிவோம். அகந்தையின் மூலத்தை நாடி அதை அறியும்போது, அகந்தை ஆத்மாவில் ஒடுங்குகிறது. அத்துடன் ஆசைகளும் அழிகின்றன என்பது பகவானின் உபதேசம்.

'நான் ஆசையுடையவன்' என்று சிந்திக்கும்போது, என்னையும் என் எண்ணத்தையும் பிரிக்கும் துவந்துவ நிலை, இருமை நிலை தோன்றுகிறது. இந்த இருமை உணர்வு மருளில் கொண்டு சேர்க்கும். ஆசைப்படும் பொருளும் ஆசைப்படுவோனும் இரண்டும் வேறல்ல. இரண்டும் ஒன்றே என்று ஆராய்ந்து அறியும்போது அங்கே தெளிவுபிறக்கும். காணும் பொருள் எது காண்பான் யார் என்று ஆராயும்போது காணும் பொருளும் காண்பானும் ஒன்றே என்று அறிவோம். காண்பான், காண்பொருள் என்னும் இருமைநிலை அகந்தை எழுவதாலேயே எழுகிறது. பூரண அமைதியாய், அசைவற்ற நிலையில் ஆத்மாவில் ஒடுங்கும்போது, அகந்தையின் வெளிப்புற வடிவாய் இதுவரை இருந்து வந்த ஆசைப் பொருட்கள் அனைத்தும் மறைகின்றன. ஆசையை ஒழிக்கும் நேர்வழி ஆத்ம விசாரமே என்கிறார் பகவான்.

இத்தகைய ஆன்ம விசாரணை செய்வது உனக்குக் கடினமாய் உள்ளதா? அதனால் பரவாயில்லை, நீ செய்யும் செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணமாகச் செய்தாய். ஆசையினால் தூண்டப்பட்டு ஆரம்பிக்கப்படும் செயல்கள்கூட அவற்றின் போக்கில் மனப் பரிணாமத்திற்கு வழிவகுக்கும் என்கிறார் பகவான்.

செய்யும் செயலின் பயனில் இச்சை வைக்காது அதனை ஆண்டவனுக்கே அர்ப்பணமாகச் செய்யும்போது

அந்த நிஷ்காமிய கருமம் மனத்தின் வாசனைகளையும் அழுக்கையும் நீக்கி மனத்தூய்மை அளிக்கின்றது. தூய்மையான மனதில், ஆசைகள் ஒட்டுவதில்லை. அந்தத் தூயமனம், ஆன்ம சாட்சாத்காரத்திற்கான நேர்வழியை உணர்ந்து, அந்த வழியைப் பின்பற்றுகிறது.

ஆரம்பத்தில் ஆசையினால் தூண்டப்பட்டு செயல்களில் ஈடுபட்டாலும், மெல்ல மெல்ல இறைவன் அருளை நாடி, அந்தக் கர்மபயனை இறைவனுக்கே அர்ப்பணம் செய்தால் வைராக்யம் பிறக்கிறது. அதனால் மனம் திடமாகிறது. திடம்பெற்ற மனமானது, புலன்கள் காட்டுகின்ற ஆசை வழியால் வெளிச் செல்லாமல், தன்னிலையில் தானே நிலைபெறுகிறது. 'ஆசைகளை அறுத்தல்' என்னும் செயலை இங்ஙனம் செய்யும்போது அது அவனை படிப்படியாக இறைநிலைக்கு அழைத்துச் செல்கிறது.

ஆசை அழிதலின் தேவையை பகவான் அக்ஷரமணமாலையிலும் கூறுகிறார்

"கூர்வாட் கண்ணியர் கொடுமையில் படாதுஅருள்
கூர்ந்துஎனைச் சேர்ந்தருள் அருணாசலா."

(அக்ஷரமணமாலை 20)

"அருணாசலா! கூர்மையான வாளுக்கு நிகரான கொடூரமும், கவர்ச்சியும் உடையவர்கள் விரிக்கின்ற கொடிய ஆசை வலையில் சிக்கிக் கொள்ளாமல் கருணைகூர்ந்து அருளுடன் என்னுடன் இரண்டறக் கலப்பாயாக" என்கிறார்.

"விஷய வஸ்துக்களின் மீது கொண்ட ஆசையை விடவேண்டும் என்பதற்காகவே, ஓர் உபாயமாகவே இறைவன் தன்மீது அடியவரை ஆசை கொள்ள வைக்கிறான்" என்கிறார் பகவான்.

"பித்துவிட்டு எனைநேர் பித்தனாக்கினை அருள்
பித்தம் தெளிமருந்து அருணாசலா ."

(அக்ஷரமணமாலை 66)

*அருணாசலா! மனமயக்கத்தினால் உலக விஷயங்கள் மீதும், பொருட்கள் மீதும் நான் கொண்டிருந்த வெறித்தனமான ஆசையை விடவேண்டும் என்பதற்காக "அவற்றையெல்லாம் கடந்து சச்சிதானந்தமாகிய உன்னை அடைய வேண்டும்" என்ற மூளாத ஆசையை எனக்கு உண்டாக்கினாய். உன் அருட்பார்வையால், உலக வஸ்துக்கள்மீது நான் கொண்டிருந்த ஆசை முடிந்து, உன்மீது பெருங்காதல் கொண்ட பைத்தியமாகவே மாறிவிட்டேன். உன்மீது நான் கொண்டுள்ள இந்த ஆசைகூட அருள்வயப்பட்டதாயினும்கூட, ஓர் ஆசைதானே! முன்னே நான் உலகத்தின்மீது கொண்டிருந்த பித்து கோணலான பித்து. அதுபோய் நான் இப்போது உன்மேல் கொண்டுள்ள பித்து நேரான பித்து. இந்தப் பித்தான ஆசையும் போய் உன் உண்மை ஸ்வரூபத்தை நான் அறிந்து, அதனுடன் ஒன்றுபடுவதற்கான (பைத்தியம் குணப்படும்) மருந்தையும் நீயே அருள்வாயாக என்று வேண்டுகிறார் ரமண நாயகி.*

*இதே கருத்தை மீண்டும் 86வது பாடலில்*

*"மோகம் தவிர்த்து உன் மோகமா வைத்தும்என்*
*மோகம் தீராய்என் அருணாசலா."*

*என்று வேண்டுகிறார். முதலில் எனக்கிருந்த உலக சம்பந்தமான ஆசை எல்லாவற்றையும் ஒழித்து என்னை உன்னிடம் தீராத ஆசை கொள்ளுமாறு செய்தாய். ஆயினும் உன்மேல் நான் கொண்டுள்ள இந்தப் பற்றும்கூட உன்னுடன் நான் ஒன்றுவதற்குத் தடையாய் இருப்பதால் அந்தப் பற்றையும் நீக்குவாய் என வேண்டுகிறார். மனது எதன்மீது ஆசை கொண்டாலும் - அது ஈஸ்வரனே ஆயினும் சரி - அதைக் கைவிடத்தான் வேண்டும்.*

*"ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்" என்கிறார் திருமூலர். உலகப் பற்றை நீக்க இறைவன்மீது கொண்ட அன்பு ஓர் உபாயமே அன்றி அதுவே முடிந்த நிலை*

ஆகாது. இந்த இறைவன் மீதுள்ள காதலையும் நீக்கி, இறுதியான அத்வைத நிலையை அருள்வாய் என்பதே ரமண நாயகியின் வேண்டுகோள்.

ஆசைகளை அகற்றும் மற்றொரு வழி, இடையறாது 'நான் யார்' என்னும் தியானத்தில் ஈடுபடுதலே என்கிறார் ரமண பகவான்.

"அகில உபாதி அகன்ற அறிவேது
அகம்அச் சிவம்என்று அனிசம் — அகத்தே
அகலாத் தியானம் அதனால் அகத்தின்
அகில ஆசத்தி அகற்று."

(உள்ளது நாற்பது-அனுபந்தம் 25)

சுயமாக ஒளிரும் அறிவானது எதுவோ அந்த அறிவாகிய சிவத்தை 'அச்சிவமே நான்' என்று எப்பொழுதும் இடையறாமல் உள்ளத்தில் சற்றும் மாறாத தியானத்தால் மனத்தின் ஆசை போன்ற எல்லாப் பற்றுக்களையும் நீக்கிவிடு என்பது இதன் பொருள்.

நம்முன் காணப்படும் பொருட்களைப் பார்த்து ஆசையுற்று அலையும் மனம் அவற்றைக் காணும் தன்னை யாரென்று விசாரிப்பதே ஆன்மாவில் நிலைபெறுவதற்கான வழி. மேலே விரிக்கப்பட்ட பாய்மரம் எப்படிக் காற்றினால் அலைக்கழிக்கப் படுகிறதோ அதேபோல் மனம் வெளிமுகப்படும்போது பல்வேறு ஆசைகளால் அலைக்கழிக்கப்படுகிறது. ஆழ்கடலுள் மூழ்கியுள்ள நங்கூரம் நிலைபெற்று இருப்பதுபோல் மனதும் இதழாழத்துள் ஆழ்ந்து நிலைபெறுமானால், ஆசைகள் மற்றும் வாசனைகள் அழிந்து விடும். ஆழ்ந்த தியானத்தால் ஆசைகளை நீக்குக என்கிறார் பகவான்.

இவ்விஷயம் மனதில் பதியும்படி எளிய உதாரணத்தால் விளக்குகிறார் பகவான்.

"விடயத்தில் ஆசை விடாதே குரங்கை
விடச்சலிசித் தத்தை விடாது — மடக்கிச்

*சருவசூன் யப்பதத்தில் தாபிக்க அஃதால்*
*நிருவாணம் உற்றிடுவன் நேர்.”*

*(ஞானாசார விசார படலம், 27)*

பொருள்: விஷய போகங்களின் மீதுள்ள ஆசை ஒழியாமல், திரும்பத் திரும்ப அதையே நினைத்து குரங்கைவிட அதிகமாக அலைந்து கொண்டிருக்கும் மனத்தை வெளிவிஷயங்களில் நாடித் திரிய விடாமல் உள்முகமாகத் திருப்பி, இதயத்தில் நிலைபெறச் செய்தால் ஆத்ம சாட்சாத்காரத்தை அடையலாம்.

விஷய சுகத்தை அனுபவிக்கும் மனதிற்குப் போதும் என்ற திருப்தி ஏற்படாது. அனுபவிக்க அனுபவிக்க ஆசை அதிகரித்து அதிகரித்து, குரங்கு கிளைவிட்டுக் கிளை தாவுவதுபோல, இடைவிடாமல் சலித்துக் கொண்டே இருக்கும். அம்மனத்தை உள்முகமாக்கி ஆத்மாவில் நிலைபெறச் செய்வாய் என்கிறார் பகவான்.

ஆசைகளை முற்றிலும் அகற்றி ஆன்மசொரூபத்திலே திளைத்துக் கொண்டிருப்பவனே மாசற்ற யோகி என்று அறுதியிடுகிறார் பகவான்.

*“பொறிவிட யத்தில்ஒரு போதும் விருப்பம்*
*உறவிடாது உண்மமதை ஓட்டி — அறிவுரமுற்று*
*ஆசைபயம் அற்றுஎன்றும் ஆன்மாவி லேரமிப்பன்*
*மாசிலா யோகி மதி.”*

*(ஞானாசார விசார படலம், 75)*

இந்திரியங்களால் அனுபவிக்கக் கூடிய விஷயங்களில் மனதை ஒருபோதும் ஆசை கொள்ளும்படி விடாமல், மனதில் உள்ள மமகாரத்தை (இவை என்னுடையவை என்னும் எண்ணம்) ஒழித்து, அறிவை வலிமை உடையதாகச் செய்து எதனிடமும் ஆசையும் பயமும் இன்றி, எப்போதும் ஆத்மாவிலேயே வாழ்பவனே யோகி” என்பதே இதன் பொருள்.

விருப்பு என்கிற ஆசையின் மறுபக்கம் வெறுப்பு என்பதாம். இவையெல்லாம் மனத்தின் மாறுபாடுகள்.

இவை அனைத்தையும் மனத்திலிருந்து மெல்ல மெல்ல அகற்றிடுக என்று, ஞானாசார விசார படலத்தின் இப்பாடலில் கூறுகிறார் பகவான். ஆடம்பரத்தின் அடிமை ஆவதால் அளவற்ற ஆசைகளும் தேவைகளும் உருவாகின்றன. ஆசைகள் நிறைவேறாதபோது கோபம் உண்டாகிறது. அதனால் மனக் கலக்கம் ஏற்பட்டு, தவறிழைக்கிறான். தவறு செய்வதால் தண்டனை கிடைக்கும் என்ற அச்சம் மீண்டும் அவனைக் கவ்வுகிறது. இவ் விஷச் சங்கிலியிலிருந்து விடுபட ஆசைகளை வேரறுப்பாய் என்பதே பகவான் அறிவுரை.

"பகவானின் பகவத் கீதா சாரத்தில் உள்ள 42 பாடல்களில், 6 வெண்பாக்களில் ஆசையினால் ஏற்படும் துன்பம் பற்றி பகவான் கூறுகிறார். உதாரணமாக 14வது பாடலில்,

"எவன்நூல் விதியை இகந்துஇச்சை ஏவும்
அவவழி தன்னை அடுப்பான் — அவன்என்றும்
சாரானே சித்தியொடு சாந்தி சுகத்தினையுஞ்
சேரானே முத்திச் சிறப்பு."

(பகவத் கீதாசாரம் 14)

எவன் ஒருவன் அறநூல்கள் விதித்த வழியில் நடப்பதைத் தவிர்த்து, ஆசையினால் தூண்டப்பட்டு மனம் போன போக்கில் செல்வாயானே ஆகில் அவன் ஒருநாளும் பரலோக ஆனந்தத்தையோ, இக யோக சுகத்தையோ அடையமாட்டான் என்கிறார் பகவான்.

இதற்கு மாறாக எவனது செயல்கள் எல்லாம் ஆசையின் தூண்டுதல் இல்லாமல் அமைகின்றனவோ, எவன் தனது செயல்களைக் கர்ம யோகமாகச் செய்கின்றானோ, அவனுடைய கர்ம மூட்டைகள் அனைத்தும் ஞானாக்கினியாய் எரிக்கப்பட்டு விடுகின்றன (பாடல் 25). வினைகளைக் கடந்த அந்த வீரனையே ஆத்மஒளி கண்ட ஞானபண்டிதன் என்று ஆன்றோர் அழைக்கின்றனர். 'அறிவெரியால் வெந்த

*வினையான்' (ஞானாக்கினியால் எரிக்கப்பட்ட வினை) என்று பகவான் அழகிய சொல்லாட்சியுடன் கூறுகிறார்.*

*அதேபோன்று, 26ஆவது பாடலிலும், ஆசைகள் நீங்கப்பெற்று எண்ணங்கள் எழாது அடங்கிய மனம் உடையவர்கள் ஒளிவடிவமான ஆத்மாவை உணர்வார்கள். பந்தபாசம் அற்ற இந்த ஞானியர்க்கு பரிபூரண ஆனந்தம் கைகூடுகிறது. அதே சமயம், இந்த நிலையை அடைய முக்கியமான கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த உயர்நிலையை அடைய, மனத்தையும் புத்தியையும் இந்திரியங்களையும் அடக்கி, ஆசை, பயம், சினம் போன்ற எதிர்மறைப் பண்புகளை அடியோடு விட்டுவிட வேண்டும். வேறு எதையும் நாடாமல் சதாகாலமும் முக்தியை முயன்று நாடவேண்டும். இவ்வாறு பயின்று வெற்றி பெறுபவனே ரிஷி எனப்படுவான்.*

*“ஒடுக்கிப் பொறியை உளத்தை மதியை*
*விடுத்துஆசை அச்சம் வெறுப்பு — மடுத்துஎன்றும்*
*முத்தி தனக்கே முனையும் முனிவன்எவன்*
*முத்தனே அந்த முனி.”*

*(பகவத் கீதாசாரம் 29)*

*ஆத்மபோதம் 33ஆவது பாடலிலும் “நான் எண்ணங்களின் உருவாகிய மனம் இல்லை. எனவே மனதினால் அடையக்கூடிய துன்பம் விருப்பம் சினம் அச்சம் போன்றவை என்னைச் சேராதவை” என்று எண்ணி, தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து ஆசைகளை அடியோடு நீக்கி ஏகாக்கிர சிந்தனையுடன் எல்லையற்ற ஆத்மாவை சிந்திப்பாய்” என வழிகாட்டுகிறார் பகவான்.*

*ஆசையினால் உந்தப்பட்டு, இதனால் நம் வாழ்வு வளப்படும் என்று எண்ணிக்கொண்டு, அவற்றைக் கைக்கொண்டபின் அவை பயன்படாமல் ஒழிந்தன. இப்போதுதான் நிச்சயமாக நம்மை உய்விக்கும் ஒன்று உள்ளது என்று கண்டுகொண்டேன். அதைவிடாமல்*

கைப்பற்றிக் கொண்டேன் என்று அபிராமிபட்டர் பாடுகிறார். ஒன்று கண்டுகொண்டேன் என்றவர் அது இன்னதென்று சுட்டிக் காட்ட முடியாதது. இன்ன இயல்புள்ளது என்று வருணிக்க இயலாதது. மனதாலும் வாக்காலும் பற்ற முடியாத பரம் அது, மனத்தால் அணுக இயலாதது; வாக்காலும் எடுத்துரைக்க இயலாதது

*அசிந்த்ய ரூபா (லலிதா ஸஹஸ்ரநாமம் 554)*
*மனோவாசாம கோசரா (சஹஸ்ரநாமம் 415)*

என்று கூறப்படும் ஆத்மாவே அது. ஏழுகடல் போன்று பரந்த எல்லா அளவையும் கடந்தது அந்த ஆத்மா. உபநிடதம் கூறுவதுபோல் ஒளிக்கு ஒளியாய் ஒளிர்கின்ற ஆத்மாவே அந்தப் பரம் 'ஒளிக்கு ஒளிதந்தது' என்று பகவானின் உள்ளது நாற்பது பாடலில் கூறப்படும் ஆத்மாவை அடைபவன் ஆசைகளைக் கடக்கிறான்.

"வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ! ஒருவர்
வீழும்படி யன்று, விள்ளும்படி யன்று. வேலை நிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே!"
(அபிராமி அந்தாதி 47)

(வேலைநிலம் ஏழு - ஏழு சமுத்திரங்கள்
பருவரை எட்டு - எட்டு பர்வதங்கள்)

"பரம்பொருளான ஆத்மாவை அருளால் பெற்ற ஞானத்தால் அறிந்து கொண்டேன்" என்று ஆசை கடந்த ஞானியாம் அபிராமி பட்டர் கூறுவதைக் கண்டோம். கருத்துப் பரிமாறலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# சித்-சக்தி

## நொச்சூர் வெங்கடராமன்

## தமிழாக்கம்: கௌதமன்

*உள் மனதின் அடியாழத்தில்*
*நாம் காணவொண்ணா சக்தி ஒன்று பயணிக்கிறது*
*அது காரிருளிலும் அதன் காரிருள் பயணம்*
*பேரொளியில் அதன் பயணமே அறிவுக் கண் காட்சி*
*இச் சக்தி வெறுவெளியிலிருந்து உதித்தது*
*அதன் தோற்றம் அவிச்சையையும் அறிவையும் தாண்டிய ஒன்று*
*அதுவே சித்-சக்தி*
*பரம்பொருளின் பேராற்றலே அது!*
*அது ஆத்ம அக்னியில் எழுந்த ஜ்வாலை*
*அது அறியாமைத் தளத்தில் புகும்போது*
*அதுவே ஆசையாகவும் சிற்றறிவாகவும் தோன்றுகிறது*
*இந்த இருமையைக் கடந்து 'உள்ளது' உள்ளபடி காண்க.*
*அப்போது அதனை*
*அருளின் ஆற்றலாகவும்*
*அன்னையின் அன்பாகவும்*
*தந்தையின் ஒழுங்குபடுத்தும் திறனாகவும் காண்பாய்*
*முழுமையான ஒன்றிலிருந்து தோன்றிய அது ஒன்றே*
*தேகம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்கிறது*
*மனம் விஷயங்களைப் பற்றி எண்ணுகிறது*
*இவை இரண்டிலுமே இயக்கம் உள்ளது*
*இவை இரண்டையும் தாண்டி*
*எல்லையற்ற ஆழங்கொண்ட பேரமைதி.*
*மனத்தின்ஊடே வடித்தெடுக்கப்பட்ட பேரமைதி*

*நம் ஒவ்வொரு ஜீவ அணுவினையும் நிரப்பும் பேரமைதி*
*இந்தப் பரிமாணத்தை ஒருவன் அடையும்போது*
*இந்த அகங் காட்சியும் முற்றிலும் உருமாறுகிறது*
*எண்ண அதிர்வுகள் நிரம்பிய மனமும்*
*அவயங்கள் ஒன்றுகூடிய இந்த பௌதிக தேகமும்,*
*மற்றும் ஒவ்வொரு அணுவும்கூட*
*அந்தப் பரத்தால் அமையப் பெற்றது*
*மனம் அப்பேரமைதியின் அதிர்வுத் தோற்றம்*
*தேகமோ ஜடத் தோற்றம்*
*தேகம் இடைவிடாமல் மாறிக் கொண்டே உள்ளது*
*மனமோ எப்போதும் எண்ண அலைகளால் நிரம்பியுள்ளது.*
*மாற்றம்தான் இயற்கையின் நியதி*
*மாற்றம்கண்டு கொண்டே உள்ள இவற்றைக் கடந்து*
*ஆழங்காணா பேரமைதி உள்ளது*
*இந்தப் பேரமைதி வெறும் தனித்தியக்கம் அல்ல*
*உடலிலும் உள்ளத்திலும் ஊடுருவும் சக்தியே*
*இப் பேரமைதி*
*ஒவ்வொரு ஜீவ அணுவினையும் உயிரூட்டுவதே*
*இப் பேரமைதி*
*அப் பேரமைதியில் நான் கரையும்போது*
*இவ்வகங் காட்சி அனைத்தும் உருமாற்றம் அடைகிறது*
*அங்கே தேகமும் இல்லை, மனமும் இல்லை!*
*தோற்றம் முழுமையே இந்த அனாதியான*
*பேரமைதியால் பூரணமாக நிரப்பப்பட்டுள்ளது.*


## ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# உலகம் உண்மையா?

## கீதா ரவிச்சந்திரன்

நான் பகவானது உபதேசங்களைப் படிக்க ஆரம்பித்தபோது, துவக்கத்தில் சில மனக் குழப்பங்களில் சிக்கிக் கொண்டேன். உலகம் மெய்யானது அல்ல என்ற அவரது கருத்து, நான் பல நாட்களாக நம்பிக் கொண்டிருந்த கொள்கைகட்கு எல்லாம் ஓர் அறைகூவலாக இருந்தது. என்னுடைய அரைகுறை அறிவில் நான் எண்ணியது எல்லாம், உலகில் தார்மிகம் சார்ந்த கருமங்களைச் செய்வதே ஆத்ம சாதனையாகும் என்றும் அப்படித் தார்மீகச் செயல்களைச் செய்வதே உலகிற்கு நலம் பயக்கும் என்றும், மெய்யான இவ்வுலகில் வாழ்வோர் எல்லோரும் (நான் உள்பட) இதனால் முன்னேற்றம் அடைவர் என்றும் திடநம்பிக்கை கொண்டிருந்தேன். ‘சுய முன்னேற்றம்’ பற்றி எழுதப்பட்டுள்ள எண்ணற்ற நூல்களும், சுய முன்னேற்றப் பயிற்சி தருவோர் பலர் நடத்தும் பயிற்சி வகுப்புகளும், “இதோ பார்! நான் சொல்வதை எல்லாவற்றையும் அப்படியே பின்பற்று! உடனடியாக உன் சக்தி மேம்பட்டு, உனது முயற்சிகள் அனைத்திலும் வெற்றி காண்பாய்!” எனப் பிரமாணம் தரும் நவீன தீர்க்கதரிசிகளும் எனது மனதைத் தமது வலிய பிடியில் சிக்க வைத்து இருந்தனர். இதனால் “உலகம் பொய்யானது” என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

---

கீதா ரவிச்சந்திரன் பெங்களூரில் வருமானவரி ஆணையராய்ப் பணி புரிபவர். பகவானிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட சாதகர். ஸ்வாமி சாந்தாநந்தபூரியிடம் வேதாந்தம் பயில்பவர்.

பகவானின் உபதேசத்தைப் படிக்கப் படிக்க, என்னுடைய இந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை உணரத் துவங்கினேன். இந்த உலக விஷயங்கள் வெறும் கானல் நீர் போன்றதே என்பதை பகவான் தனது முதல் உபதேசமாகிய 'நான் யார்' தொகுப்பிலேயே சிவப்பிரகாசம் பிள்ளைக்குத் தெளிவுபடுத்தி உள்ளார். இந்த உரையாடலின் பகுதியை இப்போது காண்போமா!

சிவப்பிரகாசம் பிள்ளையின் கேள்வி: எப்போது ஆத்ம சாட்சாத்காரம் சித்திக்கும்?

பகவானின் பதில்: நாம் காண்பதாகத் தோன்றும் இவ்வுலகம் நீக்கப்படுமாயின், காண்பானாகிய ஆத்மாவை அறிவோம்.

கே: உலகம் உண்மையே என்று நாம் நம்பச் செயல்படும்போதே ஆத்ம ஞானம் சித்திக்காதா?

ப: முடியாது.


கே: ஏன்?

ப: காண்பானும் காண்பொருளும் கயிற்றில் தோன்றும் சர்ப்பம் போன்றவை. பொய்க் காட்சித் தோற்றமான பாம்பு மறையாதவரை, அதன் அடிப்படை உண்மையான கயிறு தோன்றாது. அதுபோன்றே உலகத் தோற்றம் மெய்யானது என்னும் எண்ணம் நீங்காதவரை, அடிப்படைப் பொருளான ஆத்மாவினை அறிதல் எழாது.

கே: காணப்படும் பொருளான உலகக் காட்சி எப்போது நீங்கும்?

ப: இந்தப் பொய்யறிவுகட்கு எல்லாம் காரணமாய் உள்ள மனம் ஒடுங்கும்போது, உலகத் தோற்றம் மறையும்.

ஆரம்ப காலத்தில் இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாவிடினும், நான் தொடர்ந்து பகவானைப் பயின்றேன். அப்போதுதான், பகவான் எடுத்துக் காட்டிய



'இரு நண்பர்களின் கதை'யைப் படித்தேன். இந்தக் கதையில் இன்பமும் துன்பமும் வெறும் கற்பனையின் நினைவே என விளக்குகிறார். ஒரு ஊரில் இரு நண்பர்கள் பணம் தேடும் முயற்சியில் பெருநகரத்திற்குச் சென்றனர். பல மாதங்களாய் அவர்களைப் பற்றி ஒரு தகவலும் ஊருக்குக் கிடைக்கவில்லை. ஊரிலிருந்து நகரம் சென்ற ஒருவன் தற்செயலாக இருவரில் ஒருவரைச் சந்தித்தான். அவன் ஊரானிடம் தான் நன்கு உழைத்துப் பெரும் செல்வந்தனாய் ஆகியிருப்பதைக் கூறினான். அதே சமயம், தன்னுடன் வந்த நண்பன் எதிர்பாராமல் இறந்த துயரச் செய்தியையும் கூறினான். ஊருக்குத் திரும்பிச் சென்ற பயணி, மனக் குழப்பத்தால் தனவந்தனாய் இருப்பவன் இறந்து விட்டவனாகவும், உண்மையில் இறந்தவன் பெரும் தனவந்தனாய் இருப்பதாகவும் மாற்றிக் கூறிவிட்டான். அதைக் கேட்ட (உயிரோடு உள்ள) செல்வந்தனின் குடும்பத்தினர் அவன் இறந்து

விட்டதாக எண்ணிப் பெரும் துயரத்தில் ஆழ்ந்தனர். உண்மையில் இறந்தவன் குடும்பத்தினரோ, அவன் நல்ல நிலையில் உயர்ந்திருப்பதாக எண்ணி, விருந்து வைத்துக் கொண்டாடினர். இந்தக் கதை என் மனதைக் கவர்ந்தது. ஆயினும் இந்த உதாரணம் இக்காலத்திற்குப் பொருந்துமா என்று யோசிக்கத் துவங்கினேன். காலத்தையும், தூரத்தையும் சார்ந்த கருத்துகள் அவற்றால் மாறுபட்டுத் தோன்றலாம். ஆயினும் விஞ்ஞான முன்னேற்றத்தால் தூரமும், செய்தி நம்மை வந்து சேரும் காலமும் மிகக் குறுகும்போது, இத்தகைய குளறுபடிகள் ஏற்படாது என எண்ணினேன். எவ்வளவோ தொலைதூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகள்கூட தொலைத்தொடர்பு முன்னேற்றத்தினால் நம்மை உடனே வந்து அடைகின்றன. எனவே, இக்கதையில் நிகழ்ந்தது போன்ற நிகழ்வுகள் இப்போது நிகழாது என்று எண்ணினேன்.

என்னுடைய இந்த முடிவை மீண்டும் ஆராய்ந்தபோது எனது கருத்து தவறானது என்று கண்டேன். நாம் உடனே உண்மைகளை அறிய முடியும் என்ற எண்ணத்தினாலேயே நாம் தவறான கருத்துக்களை ஸ்வீகரிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம். நமது தன்முனைப்பின் விளைவே இது. இந்தக் கதையின் மாறுபட்ட வடிவங்கள் இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மருத்துவமனையில் இரு நோயாளிகளின் ஆய்வுக் குறிப்புகள் மாறிப் போய், குழப்பம் விளைந்து, துயரமும் மகிழ்ச்சியும் இடம் மாறுவதைக் காண்கிறோம் அல்லவா! இதனால் உண்மைக்குச் சற்றும் தொடர்பே இல்லாமல் ஒருவருக்குத் துயரமும், மற்றவர்க்கு ஆனந்தமும் உண்டாவதைக் காண்கிறோம் அல்லவா!

இதைத் தொடர்ந்து என் மனதில் இன்னொரு எண்ணம் தோன்றுகிறது. 'கண்டு உணர்தல்' என்பது ஒரு மனிதனின் தனிப்பட்ட உணர்வல்ல; ஏனையோர் "அது சரியான புரிதல்தான்" என்று உறுதி செய்தால்தான் அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று எண்ணுகிறோம். நம்மைச்

சுற்றி உள்ள பிறர்க்கு நம் உணர்வு சரியா, தவறா என்று அறுதியிடும் உரிமையை அளித்து விடுகிறோம். நம் அனைவர் கண்களையுமே 'அறியாமை' என்ற திரை மூடிக்கொண்டு இருக்கிறது என்பதை நாம் அறிவதில்லை.

'மெய்ம்மை' என்ன என்பதை அறிய தத்துவஞானி ப்ளேடோ எடுத்துரைக்கும் 'குகை உவமானம்' பெரிதும் உதவி செய்யும். (இது ப்ளேடோ தானே தரும் விளக்கம்!)

ப்ளேடோவின் உவமையில், மக்கள் சிலர் ஒரு குகையில் சுவருடன் சங்கிலியாய்ப் பிணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தம் தலைகளைப் பின்புறம் திருப்ப இயலாது; சுவரை மட்டுமே பார்க்க முடியும். குகையில் தீ எரிந்து கொண்டு இருக்கிறது. இந்தத் தீயின் பின்னால் பொருட்கள் கொணரப்படும்போது, அவற்றின் நிழல்கள், குகையின் சுவரில் விழுகின்றன. நாம் நிஜ உலகில் காணும் எல்லா வஸ்துக்களும் சுவரில் விழும் நிழல் பிம்பங்கள் போன்றவையே என ப்ளேடோ கூறுகிறார்.

உண்மையில், பொருட்கள் சுவரில் விழும் தம் நிழல்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் தனித்தே உள்ளன. குகைக்கு வெளியே உள்ள பொருட்களின் முழுமை வடிவத்தை குகைக்குள் உள்ளவர்கள் அறிவதில்லை. எனவே சுவரில் விழும் நிழல்களின் குறைத் தோற்றத்தையே அவர்கள் முழுமையான பொருட்களின் மெய்த்தோற்றம் என எண்ணிக் கொள்கின்றனர். நிழல்களை மெய் என எண்ணிக்கொண்டு அவற்றைப் பற்றிய விவாதங்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர். புற உலகினைத் தம் புலன்களால் கண்டு, அவர்கள் தம் மனத் தோற்றங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பின்னர் அவற்றையே மெய் என்று எண்ணிக் கொள்கின்றனர். தமது துல்லியமற்ற மனத்தினாலும், சதா அசைந்து கொண்டிருக்கும் தீயினால் நிழல் தோற்றங்கள் மாறிமாறி தோன்றுவது போன்ற அரைகுறை அறிவினாலும், மெய்ம்மை திரிந்து தோன்றுகிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

*நாம் பிறந்த நாளிலிருந்து நமது குடும்பம், சமூகம், சமயம் போன்றவை நம் மனதை உபாதிகட்கு உட்படுத்தி, நம்மைப் பிறர் என்ன நம்ப வைக்கிறார்களோ அதையே நம்பும்படி செய்கின்றன. இன்பக் குகையில் உள்ள கைதிகளைக் கட்டிவைக்கும் சங்கிலிகளை ஒத்தவை. நாம் ஒவ்வொருவரும் ஏனைய ஒருவரின் கருத்துக்களே சரியானவை என உறுதிப்படுத்தும் செயலைச் செய்கிறோம். நடந்து கொண்டிருக்கும் இந்த நாடகத்தில் சிற்சில சிறிய வேடங்களை நாம் புனைய வைக்கப் படுகிறோம். நாடகம் நடந்து கொண்டிருக்கும்போதே நாடக மேடையில் ஒளி விழும் விளக்குகள் அணைக்கப்பட்டு, இவை வெறும் நிழல் சித்திரங்களே என்று அறிவதே நம்மை பொய்ம்மை சங்கிலிகளிலிருந்து விடுவிப்பதாகும்.*

*'உள்ளதை' பகவான் இவ்வாறு விளக்குகிறாரல்லவா! "ஒரு சினிமா காட்டப்படும்போது, திரையில் சித்திரங்கள் சென்றுகொண்டே இருக்கின்றன. ஆனால் திரைப்படம் வீழ்கின்ற திரையில் ஏதேனும் சலனம் ஏற்படுகிறதா? இல்லை. 'உள்ளது' என்பது இந்தத் திரைபோன்ற அடிப்படை உணர்வு. நான் நீங்கள் மற்றை அனைவரும் திரையில் தோன்றி மறைகின்ற சித்திரங்கள் போன்றவர்களே. தனி மனிதர்கள் வந்து போகலாம்; ஆனால் ஆத்மா அசையாமல் நிலைபெற்று என்றும் உள்ளது." (திரு அருண்மொழி 470)*

*இதில் ஆறுதல் அளிக்கும் விஷயம் என்னவெனில் தன்னுடைய உண்மை என்ன என்பதை அறிந்து, ஆத்ம ஞானத்தை அனுபவிக்கும் தகுதி நம் எல்லோருக்குமே உள்ளது என்பதுதான். ராணி மதாலஸா தன் குழந்தைகட்கு தாலாட்டுப் பாடும்போது ஆத்ம ஞானத்தையும் பாடல் மூலமாகவே அவர்கட்கு அளிக்கிறாள். குழந்தைகளைத் தொட்டிலில் கிடத்தி அவள் பாடிய தாலாட்டுக் கீதங்கள், அவர்களைத் தமது அமரத்துவமான என்றும் சுதந்திரமான ஆத்ம சாம்ராஜ்யத்தில் விழித்தெழச் செய்தது.*

*"நீ என்றும் தளையற்ற சுதந்திரமான தூய, மாசற்றவன்*
*நீ அஞ்ஞானத்திலிருந்து பூர்ணமாக விடுபட்டவன்*
*உனக்குப் பிறப்போ, இறப்போ கிடையாது*
*நீ ஆத்மஞானத்தில் விழித்தெழுந்தவன்."*

என்பதே இந்தத் தாலாட்டு கீதம்.

ஒருநாள் நான் ரமணாஸ்ரமத்திற்கு வந்தபோது, ஸ்வாமி சாந்தானந்த பூரியிடம், "எனக்கு மட்டும் இந்தக் கதையும், தாலாட்டு கீதமும் எனக்குக் குழந்தைகள் பிறந்தபோது தெரிந்திருந்தால், அவர்களை ஞானம் பெற்றவர்களாக பார்த்திருப்பேன். அவர்கள் உள்ளத்தில் இளம் வயதினருக்கு ஏற்படும் எதிர்ப்பு உணர்வுகள் எதுவுமே இருந்திருக்காது. இப்போது இதற்காக ஏதேனும் செய்ய முடியுமா?" - என்று வினவினேன். ஸ்வாமிஜி ஒரு கண் சிமிட்டலுடன் "உன்னுடைய வளர்ந்த மகன்கள் துயிலும்படி ஒரு பெரிய தொட்டிலை முதலில் கண்டுபிடி" என்றார். உண்மையில் பகவானின் அருள்வெள்ளம் இடையறாது எப்போதும் பாய்ந்துகொண்டே இருப்பதால், நல்லது செய்ய காலம் கடந்துவிட்டது என்பது எப்போதுமே இல்லை; எந்த நொடியிலும் நாம் இறையருளைப் பெறலாம்.

"உண்மையில் இருக்கும் ஒன்றே ஒன்று, நம் இதயத்தில் உள்ள எல்லையற்ற பரவெளிதான் அது. அறுதியான, இறுதியான உண்மை என்பது, தூய ப்ரக்ஞை உணர்வு ஒன்று மட்டுமே மெய்யானது என்பதே. இந்தப் பேருண்மையை ஜீவன் அறியும்வரை இந்த அளவற்ற அறியாமையிலிருந்து அவன் விடுபட முடியாது."

(ஸ்வாமி சாந்தானந்தபூரியின் 'குருவாசகக் கோவையில் சாதனை' என்ற நூலிலிருந்து)

# ஏக பில்வம் ரமணார்ப்பணம்

**பிர. கிரிதரஜெகதீஷ்**

*பொய் பொருந்தக் கூறினால், உண்மை நின்று கொண்டு விழிக்கும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. மற்ற விஷயங்களுக்கு இந்தப் பழமொழி ஏற்புடையதோ என்னவோ! ஆனால் ஆத்ம அநாத்ம விஷயங்களில் இது நன்கு ஒத்து வருகிறது.*

*'நான்' என்ற அனுபவ உணர்வைக் குறித்த வாச்சியார்த்தத்தில் ஜீவன் மதி மயங்கியிருக்கிறான். 'நான்' என்ற பதப்ரயோகத்தின் லக்ஷியார்த்தம் எங்கும் நீக்கமற நிறைந்த பிரம்மமாக இருந்தாலும், மாயையின் ஆதிக்கத்தின்கீழ்க் கட்டுண்ட மனம் 'நான்' என்ற சொல்லின் வாச்சியார்த்தத்தில் அளவற்ற சிரத்தையுடன், தன்னை உடலாகக் கருதி ஸம்ஸாரத் துயரத்தை நன்றாக அனுபவித்து வருகிறது.*

*சித்தமலம் மனதிலுள்ள விருப்பு, வெறுப்புகள் தொடரும்வரை உலகம் வெகுசத்யமாகத் தோன்றிக் கொண்டிருக்கும். உலகம் அதனுடைய ஸத்யத்வத்தை நம்மிடம் இருந்து பெற்றே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்திடம் நமக்கு உள்ள ஸத்யத்வ புத்தியை நீக்கியாக வேண்டும். அப்பொழுதுதான் பிரம்மக்ஞானம் மனதில் ஸ்புரிக்கும். ஆகவே ஆத்ம சாதனத்தின் துவக்கமே சித்த மலத்தைப் போக்கி தூய்மையை வேண்டுவதாய் அமைந்திருக்கிறது.*

எது உலகமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறதோ, அதுவே ஞான நிஷ்டைக்குப் பிறகு பிரம்மமாக விளங்கப் போகிறது. இன்னும் கூறப்போனால் எது பிரம்மமாக இருக்கிறதோ அதுவே ஜீவனுடைய சித்த விகாரத்தால் பிரபஞ்சமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

பிரச்சனையும், தீர்வும் ஒரே இடத்தில் கலந்து கிடக்கின்றன. இப்போதைய தேவை 'ஸத்'-ஐ இடமாற்றிப் புரிந்து கொள்வதில்தான் [Shifting the existence] அடங்கியிருக்கிறது.

பகவான் ரமணரின் இன்ஜெக்ஷன் [Injection] இங்குதான் நடைபெறுகிறது. தேவையான இடத்திற்குரிய நேரிடையான தீர்வு மருந்தாக உட்செலுத்தப்படுகிறது.

நான்என்னு இத்தேகம் நவிலாது உறக்கத்து
நான்இன்றுஎன்று யாரும் நவில்வதிலை - நான்ஒன்று
எழுந்தபின் எல்லாம் எழும்இந்த நான்எங்கு
எழும்என்று நுண்மதியால் எண்.

ஜடமான இந்த தேஹம் தேஹியின் அபிமானம் இன்றி தானாக 'நான்' என்று ஒருபோதும் கூறுவதில்லை. உடலைவிட்டு ஒன்றும் அறியாமல் உறக்கத்தில் இருந்தபோதும் இந்த 'நான்' இல்லாமல்போனது என்று யாராலும் சொல்ல முடிவதில்லை. இந்த 'நான்' என்ற அஹங்காரம் எழுந்தவுடன் அனைத்தும் எழுகின்றன. ஆகவே இந்த 'நான்' என்பது எங்கிருந்து எழுகிறது என்று நுண்மதியால் எண். விசாரம் செய்.

- உள்ளது நாற்பது, 23 வது பாடல்

கண்ணிற்குத் தெரிகிற இந்த உலகம், கண்ணிற்குத் தெரியாத அந்த இறைவன், இவை இரண்டுமே மனிதனுக்குப் பெரும் சவால்களாக விளங்கி வருகின்றன. அனுபவத்தில் நன்கு விளங்கிக் கொண்டிருக்கும் உலகத்தை முழுவதுமாக அடைந்துவிட மனிதன் ஆவல் கொள்கின்றான். அவனுடைய ஆசை உறக்கத்தில் தான்



நிறைவேறுகிறது. இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் மனதிலிருந்து நீக்கிவிட்டு ஆழ்ந்த நித்திரையில் அனைத்தையும் அடைந்த பூர்ண மன நிறைவுடன் மனிதன் விளங்குகிறான்.

ஆகவே உலக அனுபவங்கள் குறையக் குறைய மனதில் நிறைவு தோன்றுகிறது. ஆகவே பௌத்தர்கள் ஒரு முடிவிற்கு வந்தார்கள். மனதிலிருந்து முழுவதுமாக இந்த உலகத்தை நீக்கிவிட்டால் நிறைவாக இருக்கலாம் என்று யூகித்து பயணத்தை ஆரம்பித்தனர். அவர்களுடைய பயணம் பூர்த்தியாகவில்லை. காரணம் முழுப் பயணத்திற் குண்டான டிக்கெட் பயணச்சீட்டு அவர்களிடம் இல்லை. ஈச்வர பக்தி என்கிற பயணச்சீட்டு அவர்களிடம் இல்லை. ஆகவே மாயையால் பிரயாணத்தின் நடுவிலேயே கீழே இறக்கி விடப்பட்டார்கள். எப்படி என்று பார்ப்போம்.

*சித்த சுத்தியும், ஈச்வர பக்தியும் இல்லாத மக்களை 'ப்ராக்ருத ஜனாஹா' — இயற்கையின் தூண்டுதல்படி வாழ்பவர்கள் என்று சாஸ்திரம் அழைக்கிறது.*

*அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. கர்மவினையின்படி நல்லது கெட்டது அனுபவித்து நன்றாக மாயையிடம் அடிபட்டு பிறகு சத்யத்தை நோக்கி வரவேண்டியவர்கள். கால தத்துவம்தான் அவர்களுக்கு உதவ வேண்டும்.*

*இனி இரண்டாவது வகை மக்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் மனத்தூய்மை இல்லை. ஆனால் ஈச்வர பக்தி இருக்கிறது. இந்த உலகம் என்பது ஈசனின் படைப்பு என்கிற நிச்சயத்திற்கு சாஸ்திரத்தின் துணையின்றியே வந்து சேர்ந்தவர்கள். தர்மத்திற்கு உட்பட்டு உலக இன்பங்களை அனுபவிப்பதில் தவறில்லை என்று முடிவு செய்தவர்கள். சிறிது சிறிதாக விவேக, வைராக்ய சிந்தனைகள் வெளிப்பட்டு மெய்ப்பொருளை நாடுவதற்கு இங்கு வாய்ப்பு இருக்கிறது.*

*தர வரிசையில் உச்சியிலிருக்கும் மக்களைப் பற்றிப் பார்ப்போம். மனத் தூய்மையும், ஈசவர பக்தியும் ஒருங்கே அமையப் பெற்ற இந்த மனிதர்கள் உலகத்தை மித்யா - வெறும் தோற்றம் - என்று புரிந்து கொண்டவர்கள். இதற்கு ஆதாரமான இறைவனை அல்லது பிரம்மத்தை தானாகப் புரிந்து கொண்டவர்கள்.*

*அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா! கீர்திப் ப்ருஷ்டம் கிரேரிவ! ஊர்த்வபவித்ரோ வாஜினீவ ஸ்வம்ருதமஸ்மி! த்ரவிணம்ஸவர்சஸம்! ஸுமேதா அம்ருதோண்க்ஷிதஹ! இதி த்ரிசங்கோர்வேதானுவசனம்!*

*ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு திரிசங்கு என்ற முனிவரின் வசனம் இது: நான் உலகமாகிய மரத்தைத் தாங்குபவனாக இருக்கிறேன். மலை உச்சியில் போல என்னுடைய புகழ் ஓங்கியிருக்கிறது. முழுமையாகத்*

*தூய்மையடைந்தவனாக இருக்கிறேன். ஸூர்யனிடம் இருக்கின்ற ஒளியைப் போன்ற அழியாத ஆத்ம தத்துவ மாகவும், ஒளி பொருந்திய உண்மைப் பொருளாகவும், மங்கள ரூபமான அறிவை அடைந்தவனாகவும், மரண மற்றவனாகவும், மாற்றமற்றவனாகவும் இருக்கிறேன்.*

*- தைத்திரீயோபநிஷத், சீக்ஷாவல்லி, 10வது ஸ்லோகம்*

பகவான் ரமணர் போன்ற உதாரண புருஷர்களின் நிலையை மேற்கண்ட உபநிஷத் மந்திரம் பறை சாற்றுகிறது. ஆத்ம சாதகர்களுக்கு இப்படிப்பட்ட மஹாத்மாக்களின் வாழ்வும், வாக்கும் ஒரு பாலமாய் அமைந்திருக்கின்றன.

இவர்களைத் தவிர்த்து நாம் பார்க்க வேண்டிய நூதனமான வேறு சிலர் இருக்கிறார்கள். மனத் தூய்மையை நன்கு அடையப் பெற்றவர்கள். ஆனால் ஏதோ சில பாப கர்மங்களின் பலனாக ஈச்வரனிடத்தில் நம்பிக்கையற்றவர்கள். நாஸ்திக பிராந்தி கடவுள் இல்லை என்ற மயக்கம், என்றும் நோய்வாய்ப் பட்டவர்கள். இவர்களுடைய பிரச்சினை என்ன வென்றால் ராகத்வேஷங்கள் விருப்பு, வெறுப்புகள் நீங்கிய இவர்களுடைய மனம் பொய் என்று அறிந்து கொண்டது. உலகம் தத்வ நோக்கில் பொய்யே. ஆனால் ஈச்வர பக்தியோ, சாஸ்திரத்தில் சிரத்தையோ இல்லாமல், மனதிலிருந்து உலகத்தை நீக்கியதும் 'இங்கு ஒன்றுமே இல்லை' என்கிற தவறான முடிவிற்கு மிகச் சரியாக வந்தார்கள். சூன்யவாதம் என்கிற முட்டுச் சந்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். நம்முடைய பாரததேசம் செய்த புண்ணியத்தால் பகவான் ரமணரின் அவதாரம் மட்டும் நிகழாது போயிருந்தால் இப்படிப்பட்ட சூன்ய வாதப் ப்ரஸங்கத்திற்கு எத்தனையோ சாதகர்கள் பலியாகியிருப்பார்கள்.

*இருக்கும் இயற்கையால் ஈச ஜீவர்கள்*
*ஒருபொருளே ஆவர் உந்தீபற*
*உபாதிபேதம்இது உந்தீபற*

உடல், உலகம் என்கிற பொய்யான உபாதிகளின் வேறுபாட்டால் சத்யவஸ்து ஒன்றே ஜீவர்களாகவும், ஈசனாகவும் பிரிந்து தோன்றுகிறது. ஆகவே ஈசனை மறுப்பதும், தன்னை மறப்பதும் ஒன்றாகிவிடுகிறது. எனவே கையில் அகப்படாத ஈச்வரனை ஆராய்வதைவிட, கைவசம் இருக்கின்ற 'நான்'-ஐ ஆராய்ந்து, உண்மையைக் கண்டுபிடி என்பது பகவான் ரமணரின் வழிகாட்டுதல்.

'க்ஷணிக விஞ்ஞானம்' என்பது பௌத்தர்களின் தாத்பர்யம். க்ஷணிகம் என்றால் மாறுகின்ற; விஞ்ஞானம் என்றால் அறிவு. அவர்களைப் பொறுத்தவரை தொடர்ந்து மாறிக்கொண்டே யிருக்கின்ற எண்ணங்களின் ஓட்டமே இங்கு இருக்கின்றது. எதுவும் நிலையானது அல்ல. அனைத்தும் மாறிக் கொண்டேயிருக்கின்றன. ஆத்ம ஸ்தாணுஹூ - அசையாதது சத்யமானது என்பதெல்லாம் இல்லை என்பது அவர்களுடைய வாதம்.

உபநிஷத்துக்களின் மூலமாக பௌத்தர்களின் சூன்யவாதம் மறுக்கப்பட்டு 'காரண ஸத்தா நிரூபணம்' அனைத்திற்கும் ஆதாரமான காரண வஸ்து ஒன்று இருக்கிறது என்கிற விசாரம் சங்கரரால் செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தை நிலைநாட்ட சங்கரர் 'ப்ரத்ய பிக்ஞா' என்ற பதத்தை ப்ரயோகம் செய்கிறார். 'ப்ரத்ய பிக்ஞா' என்றால் பார்த்ததைத் திரும்பவும் பார்த்தல். ஒருபொருளை முதன்முதலாகப் பார்த்து அதைப் பற்றிய அறிவை [Cognition] அடைகிறோம். பிறகு அதேபொருளை திரும்பவும் அடுத்தமுறை பார்க்கும்பொழுது மனதில் வருகிற அறிவு என்பது ஏற்கனவே பார்த்ததைப் பார்ப்பதிலிருந்து [Recognition] வருகிறது. சுருக்கமாகக் கூறினால் ஞாபகப் படுத்துதல். நேற்று பார்த்த 'நான்' தொடர்ந்து இல்லையென்றால் இன்றைக்கு நான் நேற்று

பார்த்தவரை எப்படி ஞாபகப்படுத்திப் பார்க்க முடியும்? நேற்று பார்த்த ஆளும், இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிற ஆளும் ஒரே ஆளாகத் தொடர்ந்து இருப்பதால்தான் ப்ரத்ய பிக்ஞா (ஞாபகப்படுத்துதல்) என்பதற்கு சாத்யமாகிறது. ஆகவே க்ஷணிக விக்ஞானம் என்பது மெய்ப்பொருள் ஆகாது என்று ஆச்சார்யர் பௌத்தர்களுடைய வாதத்தை திரஸ்கரித்து விட்டார்.

சாஸ்திரத்தின் துணையின்றி சாதாரணமாகச் சிந்தித்துப் பார்த்தாலே இதிலுள்ள உண்மை விளங்கிவிடும். அனைத்தும் தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கிறது என்று உணர மாறாத ஒன்று இருந்தாக வேண்டும் அல்லவா?

பகவான் ரமண சந்நிதியிலோ விசாரம் நீண்ட நேரம் நிகழ்வதில்லை. குறி பார்த்து அம்பு எய்யப்படும். பழம் விழுந்துவிடும். சாதகர்களின் பசி தீர்க்கப்படும். பகவானுக்கும், அடியார்களுக்கும் இடையே நிகழ்ந்த கீழ்க்கண்ட சம்வாதமே இதற்கு ப்ரமாணம்.

ஒரு அன்பர்: கடவுள் உண்மையாக இருக்கிறாரா? இந்த உலகம் உண்மையில் இருக்கிறதா?

பகவான்: இப்படிக் கேட்கின்ற நீங்கள் உண்மையில் இருக்கின்றீர்களா? இதைப்பற்றி எப்பொழுதாவது நீங்கள் யோசித்தது உண்டா? உங்களுடைய இருப்பை உங்களால் மறுக்க முடியுமா? உங்களுக்கு அந்நியமாக இருக்கின்ற விஷயங்களை அறிவதில் ஆர்வம் காட்டுகின்ற நீங்கள் உங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. முதலில் உங்களுடைய இருப்பை [Presence] என்னவென்று பார்த்துவிடுங்கள். ஈச்வரன், உலகம் என்பன தங்களுடைய இருப்பைத் தாங்களே பார்த்துக் கொள்வார்கள். உங்களுடைய ஆசையும், அக்கறையும் உண்மையில் உங்கள்மேல்தான் இருக்கிறது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

கடவுளோ, உலகமோ உங்களுடைய ப்ரயோஜனத்தை உத்தேசித்தே ப்ரஸங்கிக்கப்படுகின்றன. ஆகவே முன்னிலையான உலகத்தையும், படர்க்கையான இறைவனையும் அறிய முற்படும் முன் தன்னிலையான உங்களைத் தெளிவாக இத்தகையது என்று கண்டு பிடியுங்கள்.

இறைவனுக்கு எதை நைவேத்தியமாகப் படையல் இடுகிறோமோ அதைத் பல மடங்காக திரும்பவும் இறைவன் நமக்கே தந்து விடுகிறான். காரணம் இறைவன் அவைகளை நம்மிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. ஜீவன் தன்னுடைய ‘நான்’-ஐ நம்மிடம் படையல் செய்வானா என்பதுதான் இறைவனின் எதிர்பார்ப்பு.

சிறிய வில்வ இலையை பகவான் பாதத்தில் சமர்ப்பிப்பது போல இந்த சிறிய நான்-ஐ அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பகவானிடம் சமர்ப்பிக்கப்பட்ட ’நான்’ திரும்பி வருவதில்லை. அது பகவான் மயமாகவே மாறி விடுகிறது.

ஒரு முடிச்சு விழுந்துள்ளது. அதுவும் நான்-ல் விழுந்திருக்கிறது. அதன் விளைவாய் ஜகத், ஈச்வர ஆரவாரங்கள் என்கிற பல முடிச்சுகள் ஏற்பட்டு பெரும் சிக்கல்கள் உருவெடுத்து உள்ளன.

எல்லாம் நன்றாகப் போய்க் கொண்டிருக்கும்வரை உலகத்தையோ, கடவுளையோ யாரும் குறை சொல்வதில்லை. நெருக்கடி நேராக வந்து முட்டும்பொழுது உலகத்தையும், கடவுளையும் நொந்து கொள்வார்கள் அல்லது கடவுளை மட்டும் இல்லை என்று சொல்லி விடுவார்கள். உலகத்திற்குள் மீண்டும் சென்று விடுவார்கள்.

இதுபோன்ற ஆநத்தர்க்யம் இழிநிலை வருவதற்கு முன்பே நம்மைத் தட்டி எழுப்பி விடுகிறது பகவான் ரமணரின் குரல்.

கடமையைச் செய். இன்ப துன்ப அனுபவங்களை இறைவனின் ப்ரஸாதமாக ஏற்றுக்கொள். உறவுகளை மாயை அல்லது ஈசனின் வெளிப்பாடு என்று உணர்ந்து ஏற்றுக் கொள். இவைகளுக்கு இடையே அடிப்படை ஸ்ருதியைப் போல உன்னை இழந்து விடாமல் நான் யார் என்ற உண்மையில் காலூன்றப் பார்.

பகவான் ரமணரின் ஆகாங்க்ஷா உள்ளக்கிடக்கை இதுதான். குரு ரமணரின் 'நான் யார்?' என்ற பீஜ உபதேசத்தைச் செவிமடுத்த உள்ளத்திற்கு மேற்கொண்டு எதையாவது அடைய வேண்டும் என்கிற தேவை எதுவுமில்லை.

அந்த உள்ளம் பூரண ஆனந்தத்தின் அடையாளமாக விளங்குகிறது.

ரமணோதயம் மின் இதழ் கீழ்க்கண்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

www.ramanalayam.org

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2014

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்டு | 10 | ஞாயிறு | அதிகாலை 3.17 | 11 | திங்கள் | அதிகாலை 1.10 |
| செப்டம்பர் | 08 | திங்கள் | பகல் 10.42 | 09 | செவ்வாய் | காலை 08.21 |
| அக்டோபர் | 07 | செவ்வாய் | இரவு 07.13 | 08 | புதன் | மாலை 5.15 |
| நவம்பர் | 06 | வியாழன் | அதிகாலை 4.30 | 08 | வெள்ளி | அதிகாலை 4.19 |
| டிசம்பர் | 05 | வெள்ளி | மாலை 6.30 | 06 | சனி | மாலை 6.13 |

# திடஞானி தரிசனமே தேவ பூஜை

**சு. பரமேஸ்வரன், கோவை**

ஒரு நாட்டின் பண்பாடு, நாகரீகம் மற்றும் வாழ்வியல் நலங்கள் யாவும் அந்நாட்டு மக்கள் எத்தகைய பொருள்களைப் புனிதமாகப் போற்றிப் பேணி வருகின்றனரோ, அதற்கு ஏற்ப அமையும். அமெரிக்காவில் கழுகும், ரஷ்யாவில் கரடியும், அரேபியாவில் போர்வாளும், இங்கிலாந்தில் சிங்கமும், சீனாவில் நெருப்பை உமிழும் பாம்பும் புனிதப் பொருளாக உள்ளன. பாரத நாட்டில், தர்மசக்கரம், பசு, யானை, மயில் போன்றவை தேசியச் சின்னமாய் புனிதப் பொருள்களாக போற்றப் பெறுகின்றன.

பூமியின் ஒவ்வொரு பகுதிக்கும் இயற்கை அளித்த தனித்தன்மையுண்டு. பாரதத்தின் தனித்தன்மை அறம் போற்றும் நாடு, ஆன்மீகம் வளர்க்கும் நாடு எனலாம். புலன்களின் துணைகொண்டு புற உலகை மட்டும் ஆராய்ந்தால் ஆராய்ச்சி முற்றுப் பெறாது. நம் அருளாளர்கள் நம் சிந்தனைக்கு எட்டாத பல விஷயங்களை அகத்திலும், புறத்திலும் கண்டவற்றை, தம் அனுபவ அறிவு கொண்டு உணர்ந்ததை, மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்தார்கள். இது இந்த மண்ணின் சிறப்பு.

தெய்வப் புலவர் வள்ளுவர் இயற்றிய திருக்குறளில் நான்கு தலைப்புகள் மானுட வாழ்வின் ஆதார சுருதியாகவுள்ளன. அவை இறைநிலை, இயற்கை எனும்

வான் சிறப்பு, நீத்தார் எனும் இலட்சிய மனிதன், மற்றும் அறம், திருவள்ளுவர் தம் குறளை எழுதியபோது சராசரி மனிதனின் கண்ணோட்டத்திலிருந்தே குறைகளைத் திறம்பட எழுதியுள்ளார்.

ஒரு பொருள் பற்றி யார் எழுதும்போதும், அது இடையூறின்றிச் செம்மையாக முடிவடையத் துணை புரியும்படி ஏதோ ஒரு தெய்வத்துக்குக் காப்பு செய்யுள் எழுதுவது மரபு. தமிழகத்தில் பல தெய்வங்கள் இருந்தும், வள்ளுவர் எந்த ஒரு குறிப்பிட்ட தெய்வத்தையும் பாடவில்லை. ஏன்?

“வள்ளுவன் தன்னை உலகினுக்கு தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்று மகாகவி பாரதி கூறியபடி, தான் எந்த ஒரு சம்பிரதாயத்தையோ, சமயத்தையோ சார்ந்தவன் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், உலகில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதையே குறிக்கோளாக வைத்தார் என்றால் அது மிகையாகாது. இறை ஆற்றல் என்பது ஒன்றுதான். அந்த ஒன்று வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு தேசங்களில், மனித உருவில் அவதரித்து, சமுதாயத்திற்கு இலட்சிய புருஷராகத் திகழ்கிறது. இதை நாத்திகர்கள் மூடநம்பிக்கை எனவும், பொய்யாகவுமே எண்ணி மகிழ்வர். ஆஸ்திகனோ, நாத்திகனோ யாவருக்கும் மனக்கவலை உண்டு. விருப்பு, வெறுப்பு, புகழ், பிறவிப்பிணி எல்லாம் உண்டு. இவற்றிற்கு மருந்தாக இருப்பது திருக்குறளின் முதல் அதிகாரம். இறைவனிடம் சரணாகதி செய்து, செயல்கள் எல்லாம் அறம் சார்ந்ததாக இருப்பின் அதுவே முடிவிலா வாழ்வு - தெய்வீகம்.

இரண்டாம் அதிகாரம் மழையின் சிறப்பைப் பற்றியது. ஒரு நாடு வேளாண்மை சார்ந்த சமூகமானாலும் சரி, பாலை நிலச் சமூகமானாலும் உயிர்களின் ஆதாரம்

மழையே. மழைதான் உயிர்களின் அமுதம். இறைவனை நம்பாத நாத்திகனும் இயற்கையை நம்பியாக வேண்டும்.

மூன்றாம் அதிகாரத்தில் மனித குலத்திற்கு வழிகாட்ட ஒரு இலட்சிய புருஷரைப் பற்றிப் பேசுகிறது. வள்ளுவரின் திருக்குறளில் உள்ள முதல் அதிகாரமும் மூன்றாம் அதிகாரமும் பொருள் நிலையில் ஒன்றே.

நீத்தார், அறவோர், அடியார், அன்பர், அந்தணர் எனும் தமிழ்ச் சொற்கள் மனத்துறவு உற்ற ஞானியரைக் குறிக்கும். குறிப்பிட்ட ஒரு வேடம், அதை அணிந்தவர்களை மட்டும் குறிக்காமல் அது பரந்துபட்ட பொருளுடையதாக உள்ளது. அறவோர், நீத்தார், என்பவர் ஐம்புலன்களுக்கு அடிமையானவர் அல்லர். புலன்களின் எஜமானர்கள். ஒருவர் முக்குணங்களையும் கடந்து, பிரம்மநிலையை அடைந்த ஒருவரை எப்படி அடையாளம் காண்பது?

## குணம் எனும் குன்றேறி நின்றார்

ஆன்மா, இறை, இம்மை, மறுமை, அறம் ஆகியவற்றை அறியாது விலங்கு நிலையில் வாழ்ந்து கொண்டு இருப்பவர் நரர். (நாத்திகன்). அவற்றை அறியும் தீவிர முயற்சியில் இருப்பவர்கள் மனிதர்கள். அதில் வெற்றி வாகை சூடி குணம் எனும் குன்றேறி நின்றவரே நிறைமொழி மாந்தர், வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்கள். விலங்கு மனமுடைய நரர்களால், மக்கள், தேவர், தெய்வநிலையை அடைந்தவர்களைப் பிரித்தறிய இயலாது. வேதரிஷிகள், புத்தர், இயேசு, மோஸஸ், ஜோரஸ்டர், சங்கரர், இராமானுஜர், இராமகிருஷ்ணர், ரமணர், பாபாஜி ஆகியவர்கள் மனித குலத்திற்கு வழிகாட்ட வந்த லட்சிய புருஷர்களே.

ஞானிகள் எவ்வாறு இருப்பார்கள்? காட்சிக்கு எளிமையாகவும், உலகியல் நடைமுறைக்கு சற்று மாறுபட்ட வாழ்க்கை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

நடைமுறை வாழ்க்கைக்கு மாறாக உள்ளவர்களை பித்தர், பைத்தியம் என்று கூறிப் பழக்கப்பட்ட நாம், ஞானிகளையும் அவ்வாறே இகழ்ந்து புறந்தள்ளுவோம்.

"சித்தர் என்றுஞ் சிறியரென்று மறியொணாத சீவார்காள்
சித்தர் இங்கிருந்தபோது பித்தரென்றே எண்ணுவீர்

- சிவவாக்கியர்

மாணிக்கவாசகரையும் பித்தர் என்றே உலகினர் கூறினர். இதே அனுபவம் ஆழ்வார் ஒருவருக்கும் ஏற்பட்டது. அவரது பாடலைப் பாருங்கள்.

"பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர்
பேயனே எவர்க்கும் ; இது பேசி என்?
ஆயனே, அரங்க என்று அழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் என் பிரானுக்கே.

ஞானியின் அருஞ்சின்னம்

அதுசரி, இவர்களை எப்படித்தான் அடையாளம் காண்பது? விருப்பு, வெறுப்பு இல்லாமல் முயன்றால் எளிதில் கண்டுகொள்ள முடியும். அவர்களின் சந்நிதியில் எப்போதும் சாந்தமும், அமைதியும் குடி கொண்டிருக்கும். அவர்களின் கண்கள் குழந்தையைப் போல் கூர்மையான பார்வையாக, ஊடுருவிப் பார்க்கும் பார்வையாக இருக்கும். அதே சமயம் நிர்மலமாய், வெட்ட வெளியாய் இருக்கும். அவர்களின் கண்களை நாம் நேருக்கு நேர் பார்ப்பது சற்று கடினமானதாகும். அவர்களது கூர்மையான பார்வையைச் சந்திக்க முடியாமல் நாம் கண்களைத் தாழ்த்தி, தவிர்த்து விடுவோம். சமீபத்தில் நம்மிடையே வாழ்ந்தவர் பகவான் ஸ்ரீரமணர். அவருடைய கண் இமைகள் ஒன்றோடொன்று பொருந்தி இருந்ததை யாரும் பார்த்ததில்லை. மௌனத்தில் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தபோதும் அவர் கண் இமைகள் அசைவுறா. எனவே இமைப்போர் மனிதர். இமையோர் என்பவர் வானோர், தேவர் - ஞானி.

*"அற்ற சிவயோகிக்கு அருஞ்சின்னம் மூன்றுண்டு*
*பற்றலகை; உன்மத்தர்; பாலரியல்...."*

ஞானிகளிடம் நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர்களுக்கு ஒன்றை எளிதாக அறிய முடியும். அது குழந்தைகளுக்கும், ஞானிகளுக்கும் உள்ள அரிய பெரிய ஒற்றுமை. குழந்தைகளின் கண்களும் பளிங்குபோல் இருக்கும்.

நன்மை, தீமை, நல்லவர், கொடியவர், அழுக்கு, தூய்மை போன்ற வேறுபாடுகளை குழந்தைகளும் அறியமாட்டார்கள். குழந்தையின் திருஷ்டி அறியாமையால் விளைவது. ஆனால் ஞானியின் சமதிருஷ்டியானது மெய்ஞ் ஞானத்தால் நிகழ்வது. அவர்களின் செயல்களை நம் சுட்டறிவால் அறிய முடியாது. எத்தொழிலைச் செய்தாலும் பற்றின்று இருப்பர்.

ஞானி தானாக எச்செயலையும் செய்வதில்லை. அவர்களின் எல்லாச் செயல்களையும் இயக்குவது இறைவன் திருவருள்தான். ஆதலின் அவர்கள் செய்யும் செயல்கள் யாவும் அறமேயாகும். பழுத்த அன்பு எங்குண்டோ அங்குதான் உண்மையான அறமும் உண்டு. அவர்களின் அன்பு வானம் போல் வரம்பற்றது. அன்பு சாஸ்திர, சம்பிரதாய எல்லைக்குட்பட்டதல்ல. தன்னுயிர் என்றும், பிற உயிர் என்றும் வேறுபாடு இல்லாத நிலையே அவர்களின் அன்புநிலை.

## திடஞானி தரிசனமே தேவ பூஜை

ஒரு ஞானியின் தரிசனம் நமக்குக் கிடைக்கப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காலம் உள்ளபோதே இவர்களை அண்டிப் பணிவிடை செய்து, பயன் பெறுவது மனிதனின் முதற் கடமையாகும். இவர்களுக்கு உணவு, உடை தந்து காப்பது இல்லறத்தானின் கடமையாகும். இவர்களுக்கு உணவு கொடுப்பது

மும்மூர்த்திகளுக்கும் உணவு படைப்பது போலாகும். மேலும் அவர் உண்ட சேஷத்தை உண்பதால் வீடுபேறு கிடைக்குமாம்.

*"வித்தகம் ஆகிய வேடத்தார் உண்ட ஊண்*
*அத்தன்; அயன், மால் அருந்தி வண்ணமாம்*
*சித்தம் தெளிந்தவர், சேடம் பருகிடின்*
*முத்தியாம் என்றும் நம்மூலன் மொழிந்தே." - திருமந்திரம்*

நம் முன்னோர்கள் அன்னசத்திரம் கட்டி அன்னதானம் செய்தது இது குறித்தே. உண்ணுவது ஒன்றே எல்லோரையும் ஒன்றாகச் செய்வது. அன்னதானமே அன்பை நிலைத்திருக்கச் செய்யும் அருமருந்து.

ஒருவன் செய்த பாபமெல்லாம் ஒரு ஞானியின் கருணை விழிபட ஓடுமாம். எப்போது எனில் அவரைச் சரணடைந்த போது, மேலும் அவரால் நமது பிராரத்துவ, சஞ்சித, ஆகாமிய வினைகளை அழித்துவிட முடியும்.

*"தன்னை அறிந்திடும் தத்துவஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்..."*

ஞானிகளை அண்டி நம்மை அடைக்கலமாகக் கொடுத்துவிட்டதால், நம்மைக் காப்பது அவரின் கடமையாகிறது. எப்போதும் இவர்களுடன் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அவர்களைக் காணாத நேரத்திலும் மனம் உருகி, அவர்களை நினைத்தாலே போதுமாம்! நம் துயர் தீரும் என ஆறுதல் கூறுகிறார் திருமூலர்.

*"கருடன் உருவம் கருதும் அளவில்*
*பருவிடம் தீர்ந்து பயம் கெடுமாப்போல்*
*குருவின் உருவம் குறித்த அப்போதே*
*திரிமலம் தீய்ந்து சிவன் அவன் ஆமே"*

மேலும் இவர்களை எப்படி வழிபட வேண்டும் என்பதை,

*"சிவனே சிவஞானி ஆதலால் சுத்த*
*சிவனே என அடிசேரவல்லார்க்கு..."*

சிவன் - இறைவன் இருக்கும் இடத்தை நாம் அறிய முடியாது. எனவே ஞானியரைக் கண்டால் இவரே அவன் என அறிக என்றார் திருமூலர். திருமூர்த்தி என்றாலும் குருமூர்த்தி என்றாலும் ஒன்றே.

எல்லா அருளாளர்களும் தமக்குப் பிறவாமையே வேண்டும் என வேண்ட, ஒருவர் மட்டும் பிறவி வேண்டும் என வேண்டுகிறார். எதற்கு?

பிறவிதோறும் ஞானியர் என்னும் அன்பருக்குப் பணிவிடை செய்யும் பேறு கிடைக்குமாயின் துன்பம் நிறைந்த இந்த உலக வாழ்க்கை வேண்டும்; இனிமேலும் பிறவி வேண்டுமாம்.

*"மறம் மலி உலக வாழ்க்கை வேண்டும்*
*வந்து நின் அன்பர் பணியாம் அறமது கிடக்கின்*
*இன்னமும் பிறவியும் வேண்டும்..."*

என்பது தாயுமானாரின் இதயகீதம்.

ஆக ஒரு ஞானி-துறந்தாரின் பெருமையைக் கூறுவதாயின், அது இவ்வுலகின் இதுவரை பிறந்து, வாழ்ந்து, இறந்தவர்களை ஒரு சேர எண்ணிப் பார்ப்பதற்கு ஒப்பாகும்.

*"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக் கொண்டற்று."*

என்ற வள்ளுவரின் பொய்யா மொழியும் இங்கு சிந்திக்கத்தக்கது.

**உயிர் நிலைக்கோவில் (அதிஷ்டானம்)**

ஞானிகள் தூலத்தை விட்டு சித்தியான சமயம் அவர்களின் உடலைத் தகனம் செய்வது பெருங்குற்றமாகும். நாட்டில் மழையின்றி, பல கேடுகள் விளையும். அவர்களின் உடலை சாஸ்திர முறைப்படி குகை செய்து மண்ணடக்கம் செய்து, முறைப்படி

*வழிபட வேண்டும் என்பதை திருமந்திரத்தில் உள்ள பல பாடல்கள் வலியுறுத்தியுள்ளன.*

*பெரியவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் அதிஷ்டானம் - உயிர்நிலைக் கோவில் எனப்படும். உயிர்நிலைக் கோவில்களில் ஞானியரின் அனுக்கிரகக் கலையானது நிரந்தரமாக, ஊன்றி நின்று பக்தர்களுக்கு அருள்பாலிப்பதால் இப்பெயர் பெற்றது. துளசிமாடம் வைக்கப்பட்ட சமாதிக்கு "ப்ருந்தாவனம்" என்றும், சிவலிங்கம் அல்லது வில்வம் வைக்கப்பட்ட இடத்தை "அதிஷ்டானம்" என்றும் அழைப்பர்.*

*வாழ்க்கையில் எல்லாம் இருந்தும் நிம்மதியின்றி வருந்துவோர் இங்கு வந்து சில தினங்கள் தங்கி, பிரார்த்தனை செய்தால் மன சஞ்சலம் நீங்கி, சாந்தியை, மன அமைதியை அடைவது உறுதி. சலனமற்று தனக்குள்ளே அடங்கி இருப்பதுதான் சாந்தி என்பது புரியும். இதுவே ஞானிகளின் சந்நிதி விசேஷம்.*

*இத்தகைய அதிஷ்டானங்கள் நம் நாட்டில் நிறைய உண்டு. சிருங்கேரி, இராகவேந்திரர் மந்திராலயம், ரமணாஸ்ரமம், பாண்டி அரவிந்தாஸ்ரமம், ஞானேஸ்வரர் பேலூர்மடம் பாபாஜிகுகை, நெரூர் ஆகியவை சிறந்த உயிர்நிலைக் கோவில்களாகும். இதில் ரமணாஸ்ரமம் ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. பரம ஞானியும் 54 ஆண்டுகள் மானுடக் கோலங்கொண்டு, ஒரே இடத்தில் வாழ்ந்து, அடக்கமாகி, நிரந்தர அனுக்கிரக விலாசத்துடன் விளங்குவது ரமணரின் சமாதி ஆலயமாகும். ரமணரின் திருமேனி திருமந்திரத்தில் கூறியபடி சமாதி செய்விக்கப்பட்டு, அதன் மீது லிங்கம் நிறுவப்பட்டு அனுவரதமும் முறைப்படி பூசனைகள் செய்து தூய்மையாய் பராமரிக்கப்பட்டு வருகிறது. எல்லையற்ற கருணை கொண்ட ரமணரின் தூய தெய்வீக வாழ்வு பக்திக்கும், ஞானத்திற்கும் இலக்கணமாய்*

*அமைந்தது என்றால் அது மிகையாகாது. ரமணரின் உடல் நோயுற்று இருந்த இறுதிநாட்களில் பகவான் கூறியது:*

*"இந்த உடல்தான் பகவான் என எண்ணி கவலைப்படுகிறீர்கள். சுவாமி நம்மை விட்டுப் போய் விடப் போகிறார் என வருந்துகிறீர்கள்; எங்கே போவது? எப்படிப் போவது?! எப்போதும்போல் இங்குதான் இருக்கிறேன்" என தமது பூர்ண ஆத்ம பாவத்தையும், இருப்பையும், அருள் வெளியாக உள்ளதையும் உறுதிபடக் கூறியதை அன்பர்கள் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். ஞானி தன் தூலத்தையும் அதன் மறைவையும் அறிவதில்லை.*

*ரமணர் என்பது தூய உடல் அல்ல, பரம்பொருளேதான் என்ற உணர்வோடு, சதா நிஷ்டரான ரமண பகவானின் அருட்சந்நிதி இன்றும், தனிப்பெருங்கருணையாய், இன, மொழி, மதங்களுக்கு அப்பால், உலகின் எண்திசைகளிலிருந்தும் ஞானவேட்கையுடன் வரும் அன்பர்களுக்கு மோனமாய் என்றென்றும் அருளமுதம் ஊட்டி வருவது சொல்லவும் வேண்டுமோ?!*

*"திடஞானி தரிசனமே தீர்த்த மாடல்*
*திடஞானி தரிசனமே தேவபூஜை*
*திடஞானி தரிசனமே செய்யும் அறங்கள்"*

*- ரிபுகீதை*

*"ஊனமில் ஞானிநல் யோகி உடல்விட்டால்*
*தானற மோனச் சமாதியுள் தங்கியே*
*தானவ னாகும் பரகாயஞ் சாராதே*
*ஊனமில் முத்தனாய் 'மீளான் உணர்வுற்றே."*

*- (திருமந்திரம்-ஏழாம் தந்திரம், 5)*

# ஜே.கே. நோக்கில் ஆத்ம விசாரம்

*['இனி துன்பம் என்பது இல்லை' நூலிலிருந்து]*

*நம்மில் பெரும்பாலோர் எந்த ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறோம்? நாம் ஒவ்வொருவரும் எதை நாடுகிறோம்? குறிப்பாக, இந்த அமைதியற்ற உலகில் ஒவ்வொருவரும் ஒருவித மகிழ்ச்சியை, ஒரு புகலிடத்தை, ஒருவித அமைதியைக் காண முயலும்போது, எதைத்தான் தேட முயல்கிறோம், எதைக் கண்டுபிடிக்க முயல்கிறோம், என்பதை அறிந்து கொள்வது உண்மையில் முக்கியமானது. ஒருவேளை நம்மில் பெரும்பாலோர் ஒருவித மகிழ்ச்சியை, ஒருவித அமைதியைத் தேடுகிறோம் போலிருக்கிறது. கொந்தளிப்பும், யுத்தங்களும், கருத்து வேறுபாடுகளும், சச்சரவுகளும் நிறைந்த உலகில் அமைதி இருக்கக் கூடிய ஒரு புகலிடத்தை நாம் நாடுகிறோம். அதைத்தான் நம்மில் பலரும் விரும்புகிறோம் என்று நினைக்கிறேன். ஆகவே, நாம் ஒரு தலைவரிடமிருந்து இன்னொரு தலைவரை, ஒரு மத அமைப்பிலிருந்து இன்னொன்றை, ஒரு குருவிடமிருந்து இன்னொரு குருவைப் பின்பற்றுகிறோம்.*

*நாம் அமைதியைத் தேடுகிறோமா, அல்லது ஒருவித மகிழ்ச்சியைத் தரும் என்று நம்புகின்ற ஒரு மனத் திருப்தியைத் தேடுகிறோமா? மகிழ்ச்சிக்கும், மனத் திருப்திக்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது. நீங்கள் மகிழ்ச்சியைத் தேட முடியுமா? ஒருவேளை நீங்கள் மனத் திருப்தியைக் காணலாம். ஆனால், மகிழ்ச்சியை நீங்கள் காண முடியாது. மகிழ்ச்சி ஒன்றிலிருந்து*

பெறப்படுவது. அது மற்ற ஒரு பொருளின் உபபொருள். ஆகவே, பெருமளவில் அக்கறையும், கவனமும், சிந்தனையும், கவனிப்பும் தேவைப்படும் ஒன்றுக்கு நம்முடைய மனத்தையும் இதயத்தையும் கொடுப்பதற்கு முன்னே, நாம் எதைத் தேடுகிறோம் என்பதைக் கண்டு கொள்ள வேண்டுமல்லவா? அது மகிழ்ச்சியா அல்லது மனத் திருப்தியா? நம்மில் பலர் மனத் திருப்தியைத்தான் தேடுகிறோம் என்று நான் அஞ்சுகிறேன். நாம் திருப்தியடைய விரும்புகிறோம்; தேடியதன் பின் ஒரு நிறைவு உணர்வைப் பெற விரும்புகிறோம். சரி, ஒருவர் அமைதியைப் பெற விரும்பினால் அதை வெகு சுலபமாக அடைந்துவிட முடியும். ஒரு குறிப்பிட்ட கொள்கைக்காக, கருத்துக்காகக் கண்ணை மூடிக் கொண்டு தன்னை அதில் ஈடுபடுத்திக் கொண்டு, ஒருவர் அதில் ஒதுங்கிக் கொள்ளலாம். உண்மையில் அது பிரச்சினையைத் தீர்ப்பதில்லை. மூடி மறைத்துக் கொள்ளும் ஒரு கருத்தில், ஒதுங்கிக் கொள்வது போராட்டத்திலிருந்து விடுதலை அல்ல. ஆகவே, உள்ளேயும், வெளியிலும் நாம் ஒவ்வொருவரும் எதை விரும்புகிறோம் என்பதை நாம் கண்டறிய வேண்டுமல்லவா?

இந்தக் குழப்பத்திற்கு ஊடே ஏதோ ஒன்று நிலையானது, ஏதோ ஒன்று முடிவற்றது, ஏதோ ஒன்று மெய்ப்பொருள், கடவுள், உண்மை என்று இருப்பதாகத் தேடுகிறோமல்லவா? பெயர் எதுவாக வேண்டு மானாலும் இருக்கட்டும். உண்மையில், வார்த்தை, பொருள் ஆகாது. ஆகவே, நாம் வார்த்தைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம். அதை சொற்பொழிவாளர்களுக்கு விட்டுவிடுவோம். நிலையான ஒன்றுக்கான தேடல் இருக்கிறதல்லவா? நம்மில் பலரிடமும் இது இருக்கிறது. ஏதோ ஒன்றைப் பற்றிக் கொள்ள, ஏதோ ஒன்று நமக்கு நம்பிக்கை ஊட்டும், உறுதி தரும், தொடர்ந்த ஆர்வத்தையும், தொடர்ந்த உறுதிப்பாட்டையும் கொடுக்கும் என்று தேடுகிறோம். ஏனெனில், நம்மில்

நாம் உறுதியாக இல்லை. நம்மை நமக்குத் தெரியவில்லை. கண்கூடாக உள்ளவை பற்றி நமக்கு மிகுதியாகத் தெரியும். புத்தகங்கள் அவற்றைப் பற்றிச் சொல்லியிருப்பதை அறிவோம். நமக்கு நாமே தெரிந்து கொள்ளவில்லை. நேரடியான அனுபவம் நமக்கு இல்லை.

நிலையானது என்று எதைக் கூறுகிறோம்? நாம் தேடுகிற எது நமக்கு நிலையானதைத் தரும் அல்லது தரக்கூடும் என்று நம்புகிறோம்? நிலைத்திருக்கக் கூடிய மகிழ்ச்சியையும், நிலைத்திருக்கும் திருப்தியையும், நிலைத்திருக்கும் உறுதிப்பாட்டையும் நாம் தேடவில்லையா? என்றும் நின்று நிலைத்திருக்கக்கூடிய ஒன்றை, திருப்தி அளிக்கும் ஒன்றை வேண்டுகிறோம். வார்த்தைகளையும், சொல் தொடர்களையும் களைந்துவிட்டு, நேரிடையாகப் பார்த்தால், இதைத் தான் நாம் வேண்டுகிறோம். நிரந்தரமான இன்பத்தை, நிரந்தரமான திருப்தியை விரும்புகிறோம். அதை உண்மை என்றும் கடவுள் என்றும் அல்லது நாம் விரும்புகிற பெயரில் அழைக்கிறோம்.

நாம் இன்பத்தை விரும்புகிறோம். இன்பத்தைத் தரும் அறிவு, நாளை மாய்ந்து போகாத திருப்தி, இன்பத்தைத் தரும் அனுபவம் -- இவற்றையே விரும்புகிறோம். நாம் பலதரப்பட்ட திருப்திகளைச் சோதித்து விட்டோம். அவை எல்லாம் மறைந்து போய்விட்டன. ஆனால், கடவுளிலிலும், மெய்ப்பொருளிலும் நிரந்தர திருப்தியைக் காண்பதில் இப்பொழுது நம்பிக்கை கொண்டிருக்கிறோம். உண்மையில் அதைத் தான் நாம் தேடிக் கொண்டிருக்கிறோம். சாமர்த்தியசாலியும், முட்டாளும், கொள்கைவாதியும், எதையோ தேடும் நடைமுறைவாதியும் அதைத் தான் தேடுகிறார்கள். ஆனால், நிரந்தரமான திருப்தி என்று ஒன்றிருக்கிறதா? நிலையாக இருக்கக்கூடிய ஒன்று இருக்கிறதா?

ஆகவே, அமைதி, மகிழ்ச்சி, மெய்ப்பொருள், கடவுள் அல்லது நீங்கள் சொல்லக் கூடியதை மற்றொருவர் நமக்குக் கொடுக்கக் கூடுமோ என்பதை நம்மை நாமே அக்கறையோடும், ஆழத்தோடும் கேட்க வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்த இடையற்ற தேடலும், இந்த ஏக்கமும், அந்த அரிய உணர்வான மெய்ப்பொருள் உணர்வை, அந்த சிருஷ்டிக்கும் இயல்பினைக் கொடுக்க முடியுமா? அது நம்மை நாமே உண்மையில் அறிந்து கொள்ளும்போது வருகிறது. தன்னை அறிவது என்பது தேடுவதன்மூலமோ, ஒருவரைப் பின்பற்றுவதன் மூலமோ, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்திருப்பதன் மூலமோ; நூல்களைப் படிப்பதன்மூலமோ, இன்னும் இப்படிப்பட்டவை மூலம் பெறக் கூடியதா? அதுான் பிரதான விவகாரம், அல்லவா? அதாவது, நான் என்னை அறிந்து கொள்ளாத வரையில், என் சிந்தனைக்கு அடிப்படை இல்லை; என்னுடைய தேடல் முழுவதும் விரயமே. மாயைகளின் மூலம் நான் தப்பித்துக் கொள்ளலாம். கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள், போராட்டங்களிலிருந்து நான் ஓடி விடலாம்; மற்றொருவரை நான் துதிக்கலாம். மற்றொருவரை என்னுடைய விமோசனத்திற்காக நாடலாம். ஆனால், நான் என்னைப் பற்றிய அறியாமையிலிருக்கும் வரை, என்னுடைய முழு இயக்கத்தையும் உணராதவரை, என் சிந்தனைக்கோ, அன்புணர்வுக்கோ, செயல்பாட்டிற்கோ எந்தவித அடிப்படையும் இல்லை.

உங்களை நீங்கள் தெரிந்து கொள்ளாமல், உங்கள் சிந்தனை ஓட்டத்தைத் தெரிந்து கொள்ளாமல், ஏன் சிலவற்றைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளாமல், உங்களுடைய உருவாக்கப்பட்ட நிலையின் பின்னணியைத் தெரிந்து கொள்ளாமல், ஏன் நீங்கள் கலை, சமயம் பற்றி, உங்கள் நாடு, உங்கள் அயலவர் பற்றி, உங்களைப் பற்றி ஏன் சில வித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்து

கொள்ளாமல், எதைப் பற்றியும் உண்மையாக உங்களால் எப்படிச் சிந்திக்க முடியும்? உங்கள் பின்னணியைத் தெரிந்து கொள்ளாமல், உங்கள் சிந்தனையின் சாரத்தைத் தெரிந்து கொள்ளாமல், அது எங்கிருந்து வருகிறது என்று தெரிந்து கொள்ளாமல், நீங்கள் தேடுவது முற்றிலும் பயனற்றது; உங்கள் செயல் அர்த்தமற்றது அல்லவா? போர்கள், தேசிய எதிர்ப்புணர்வுகள், போராட்டங்கள் ஆகிய முழுக் குழப்பத்தையும் புரிந்து கொள்வதற்கு முன், வாழ்வின் முடிவான குறிக்கோள் என்ன என்று கண்டுபிடிப்பதற்கு முன், நம்மைப்பற்றிய சுய விசாரணையிலிருந்து நாம் தொடங்க வேண்டும், அல்லவா? இது மிகவும் எளிதாகப்படுகிறது. ஆனால், மிகமிகக் கடினமானது. ஒருவர் தன்னைப் பின் தொடர்ந்து பார்க்கவும், சிந்தனைகள் எப்படிச் செயல்படுகின்றன என்று காணவும், மிகுந்த விழிப்போடிருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் தன்னுடைய புதிரான சிந்தனை, பதிலளிப்புகள், உணர்ச்சிகள் ஆகியவற்றுக்கு விழிப்புடனிருந்து தன்னைப் பற்றி மட்டுமல்லாமல், தான் உறவு கொண்டுள்ள மற்றவரைப் பற்றியும் மிகுதியாக அறிந்து கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

உங்களைப் பற்றி எவ்வளவு தெரிந்து கொள்கிறீர்களோ, அவ்வளவு தெளிவு ஏற்படுகிறது. தன்னை அறிவதற்கு முடிவே இல்லை. நீங்கள் ஒரு சாதனைக்கோ, ஒரு முடிவுக்கோ வந்து விடுவதில்லை. அது ஒரு முடிவற்ற ஆறு. அதை ஒருவர் கற்கக் கற்க, உள்ளே செல்லச் செல்ல, அமைதி வருகிறது. தன்னை அறிவதால் -- தன்னைக் கட்டுப்படுத்துவதால் அல்ல -- மனம் அமைதியடையும் போதுதான் அந்த அமைதியில், அந்த நிசப்தத்தில் மெய்ப்பொருள் தோற்றம் கொள்கிறது. அதன் பின்னரே ஆனந்தம் இருக்க முடியும். சிருஷ்டிபூர்வமான செயல்பாடு இருக்க முடியும். இதை விளங்கிக் கொள்ளாமல், இந்த அனுபவம் இல்லாமல், புத்தகங்கள் படிப்பது, கூட்டங்களுக்குப் போவது, பிரசாரம் செய்வது எல்லாம்

சிறுபிள்ளைத் தனமானது, பொருளற்ற வேலை. ஆனால், ஒருவர் தன்னை அறிந்து கொள்ளும்போது, அந்த சிருஷ்டி பூர்வமான மகிழ்ச்சியைக் கொண்டு வரும்போது, மனத்தின்பால் படாத ஒன்றை அனுபவிக்கும்போது, அதில் ஒரு பெரும் மாறுதல் நம்மை ஒட்டிய உடனடி உறவுகளில் ஏற்படக்கூடும். ஆகவே, நாம் வாழ்கின்ற உலகிலும் அவ்வாறே ஏற்படும்.

*[நன்றி: வசந்த இதழ், கிருஷ்ணமூர்த்தி நிறுவனம்]*

# தீரன் வெங்கிட்டு

இயற்றியது: KVS

ராகமாலிகை தாளம்: ஆதி

<u>கேதாரம்:</u>

நிரஞ்ஜனானந்தனின் மங்களப் புதல்வா
நிரஞ்ஜன ரமணனின் மடிவளர் செல்வா
நிறைந்த ஆனந்தமும் பரந்த உளமும் படைத்தோய்
சிறந்த நிர்வாகியாய் பெயர் பெற்ற தலைவா
(நிரஞ்ஜ)

<u>மணிரங்கு:</u>

பயமும் சோர்வுமுனை அணுகிடப் பயந்தனவே
ஜயமும் தோல்வியுமுனை அசைக்கத் துணியவில்லையே
அடாது எதிர்ப்பு மழை விடாது பெய்யினும் தளர்வினுக்கிடம்
கொடாது நின்று முடிவில் வெற்றி பெற்ற தீரன் வெங்கிட்டு
(நிரஞ்ஜ)

<u>நாடகுறிஞ்சி:</u>

சோதனைகள் ஒன்றா இரண்டா உன் நீண்ட வாழ்வினில் மன
வேதனையின் நிழலும் பதியா மலர்ந்த முகமுடையோய்
சாதனை பல புரிந்து தழைத்தாய் அண்ணலினருளால் குரு
நாதனை நினைத்தால் போதுமே போதனை வேறெதற்கெனக்கென்றாய்
(நிரஞ்ஜ)

<u>சுருட்டி:</u>

இல்லறத்தில் ஒளிர்ந்தாய் ஒப்பிலா இல்லாளுடன்
நல்லறத்தின் பயனாய் இருவரும் நல் மக்களைப் பெற்றீர்
துறவறம் பூண்டு பற்றெல்லாம் விட்டு குருபத மொன்றையே பற்றினாய்
சிறப்பான இடம் பெற்றாய் குரு ரமண திவ்ய காதையிலே
(நிரஞ்ஜ)

# ஸ்ரீ ரமணர் யார்?

## டாக்டர். ராமகிருஷ்ணன்

*அம்ருதநாத யதீந்திரர் பகவான் யார்? என்று பகவானிடமே பாட்டு மூலம் எழுதிக் கேட்டார்.*

*“அருணாசல பரிசோபித பரமாத்புத குஹையில்*
*கருணாநிதி ரமதேயதி பகவான்முனி ரமணன்*
*ஹரியோ, சிவகுருவோ, முனிவரனோ, யதிபதியோ*
*அறிவான் தனியதுவோ மமகுருமா முனி மஹிமா.”*

*(மிக அழகிய அற்புதமான அண்ணாமலைக் குகையில் கருணா நிதியாக விளங்கும் இந்த மாமுனிவர் யார்? ஹரியா, சிவகுருவா, வரருசியோ, யதீந்திரனோ? என் குருவின் மஹிமையறிய ஆவல் கொள்கிறேன்.)*

இதற்கு பதிலாக பகவான் எழுதியது

*“அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்*
*லறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்*
*பரிவாலுள முருகாநல பரனார்ந்திடு குகையார்ந்*
*தறிவாம்விழி திறவாநிச மறிவாயது வெளியாம்.”*

*(ஹரியிலிருந்து தொடங்கி எல்லா ஜீவராசிகளின் இதயத்திலும் ஞானமயமாய் விளையாடும் பரமாத்மனே அருணாசல ரமணன் அவன் அனைத்திற்கும் மேம்பட்டவன். ஞானக் கண்ணைத் திறந்து உண்மையைப் பார்த்தாயாகில் இது உனக்குத் தெளிவாகும்.)*

*- சூரி நாகம்மாவின் ஸ்ரீரமணாச்ரமத்திலிருந்து கடிதங்கள், 2005, பக்கம் 195-196*



மிக மிகத் தெளிவாக பகவான் சொல்லி விட்டார் அருணாசல ரமணன் பரமாத்மாவே என்று. தான் மட்டுமல்ல. அனைத்து ஜீவராசிகளும் பரமாத்ம ஸ்வரூபமே என்று. பிருகததாரண்யக உபநிஷத்தில் சொல்லப்படும் "அஹம் ப்ரம்மாஸ்மி" (நானே பிரும்மம்) எனும் மஹாவாக்கியமும், சாந்தோக்ய உபநிஷத்தில் வரும் "தத் த்வமஸி" (நீ பிரும்மம்) எனும் மஹா வாக்கியமே பகவானின் பதிலில் பளிச்சிடுகின்றன.

வதந்தி தத் தத்வவித: தத்வம் யத் ஞானம் அத்வயம்!
பிரும்மேதி, பரமாத்மேதி, பகவானிதி, சப்த்ய தே.

- (ஸ்ரீமத் பாகவதம், ஸ்க.1, அத். 2, சுலோ 11)

இந்த சுலோகத்தில் "தத்வம்" உண்மை எது? என்று கேட்டால் அதுவே ஞானம், அதுவே பகவான். பகவான் சொன்ன பதிலில் பகவான் என்றாலே ஞானஸ்வரூபம் என்பது அழகாகத் தானாகவே அமைந்துள்ளது.

பகவானை ஞான ஒளியாகத் தரிசிக்கும் பெரும் பாக்கியம் ஒரு சிலருக்குக் கிட்டியுள்ளது. சில கேள்விகட்கு பதிலை பகவானிடமிருந்து பெறத் துடித்துக் கொண்டிருந்த சிவப்பிரகாசம் பிள்ளைக்கு திடீரென்று பகவானின் உருவைச் சுற்றிக் கண் கூசும் ஒளி நிறைந்து நிற்கும் காட்சி

*தென்பட்டது. மறுநாள் ஸ்ரீ பகவானின் தேகம், காலைக் கதிரவன் போலப் பிரகாசிக்கக் கண்டார். அவரைச் சுற்றிப் பூரண சந்திரன்கள் பல சூழ்ந்து, சுழன்று, பிரபை வியாபித்தது. கண்கள் கருணையுடன் ஜ்வலித்தன. இந்த ஸ்வயம் பிரகாசம்தான், ஸ்வராட், ஸ்பூர்த்தி, ஸ்புரணம் எனப்படும் சித்தின்ஜோதி. (ஆர்தர் ஆஸ்போர்ன், தமிழ்: தமிழில் லா.சு. ரங்கராஜன் - ஸ்ரீ ரமணரும் ஆன்மீகப் பாதையும், 2011, பக்.156, 157)*

*பிரும்ம ஞான சங்கத்தவர் ராகவாச்சாரியார், பகவானிடம் "ஸ்ரீகிருஷ்ணனின் விஸ்வரூபத்தைக் காண அருச்சுனன் விரும்பியதுபோல் தங்களது நிஜ ரூப தரிசனம் பெறக் காத்துக் கிடக்கிறேன். அதனைக் காண நான் தகுதியுள்ளவன் எனும் பட்சத்தினால்" என்று பிரார்த்தித்தார்.*

*"மகரிஷி அச்சமயம் மேடைமீது அமர்ந்திருந்தார். அவர் அருகில் இருந்த சுவரில் தக்ஷிணாமூர்த்தியின் சித்திரம் வரையப்பட்டிருந்தது. திடீரென்று அவரது உருவமும் தக்ஷிணாமூர்த்திச் சித்திரமும் என் பார்வையிலிருந்து மறைந்தன. கண்முன் வெறும் வெட்டவெளி மட்டுமே வியாபித்தது. சுவர் ஏதும் இல்லை. பின் வெண்ணிற மேகம் போன்ற புகையில் மகரிஷியின் உருவமும், தக்ஷிணாமூர்த்தி உருவ வெளிக்கோடும் கண்முன் உருவாயின. இவை படிப்படியாய் விரிந்து மகரிஷி மற்றும் தக்ஷிணாமூர்த்தியின் முழு உருவங்களும் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் கண்டேன். கூசிய கண்களை மூடிக் கொண்டேன். சில நிமிடங்கட்குப் பிறகு கண்களைத் திறந்து பார்த்தேன். மகரிஷியையும் தக்ஷிணாமூர்த்தியின் சித்திரத்தையும் முன்பிருந்தபடி சாதாரண நிலையில் கண்டேன்" என்று எழுதுகிறார். இவரும் பிரும்மத்தின் சுயம்பிரகாச ஒளியைக் கண்டிருக்கிறார். பகவானிடம் இதைப்பற்றி விவரித்தவுடன் பகவான் சொன்னது, "என் வடிவத்தைக் காண விரும்பினீர்.*

*வடிவம் அற்றவன் நான். நீர் கண்ட அக்காட்சியே உளதான உண்மை. தொடர்ந்து கண்டவை உம்முன் எழுந்த கற்பிதங்கள்" (ஸ்ரீ ரமணரும் ஆன்மீகப் பாதையும், 2011, பக். 192-193) இந்த சிதாகாசத்தைத் தான் ஏகவானமே என்று கீழ்கண்ட பாட்டில் பகவான் குறிப்பிடுகிறார்.*

*"நான்ஆர் இடம்எது என்று உட்போனால்*
*நினைவுகள் போய்*
*நான் நான் எனக் குகையுள்தானாய் திகழும்*
*ஆன்ம ஞானமே*
*இதுவே மோனமே*
*ஏக வானமே*
*இன்பத் தானமே*
*ஐயே அதி சுலபம். ஆன்ம வித்தை ஐயே அதி சுலபம்"*

*பகவான் ஒரு பௌதிக உருவம் அல்ல! அவர் எங்கும் இருக்கிறார் என்பதற்கு ஒரு சான்று: திருமதி நோயி என்ற அமெரிக்க மாது தன் நாட்டிற்குத் திரும்ப வேண்டிய நாள் வந்தபோது கண் கலங்கிக் கண்ணீர் வடித்தாள். அது கண்ட பகவான் "ஏனம்மா அழுகிறாய்? நீ எங்கு போனாலும் நான் உன்னோடு தானே இருக்கிறேன்" என்று தேற்றினார். இதே சந்தேசத்தைத்தான் கிருஷ்ண பரமாத்மா கோபிகைகளுக்கு உத்தவர் மூலம் சொல்லி அனுப்பினார். "பவதீனாம் வியோகே மே நஹி ஸர்வாத்மனா க்வசித்" (ஸ்ரீமத் பாகவதம், ஸ்க: 10, அத். 47, சுலோ.29)*

*(நான் உங்களை — கோபியரை பிரிந்தேன் என்ற பேச்சுக்கே இடமில்லை).*

*பகவான் எல்லா இடத்திலேயும் இருக்கிறார் என்பதற்கு மற்றொரு சான்று. ஆர்தர் ஆஸ்போர்னின் மூன்றாவது மகள் ஃபிரனியா, 7 வயது சிறுமி டாக்டர் சய்யது அங்கிள்தான் தன் சிறந்த உயிர்த் தோழன் என்றாளாம். அவளது தாயார் கேட்டாள், "அப்படியானால் பகவான் உன் தோழன் இல்லையா? என்று".*

*ஃபிரனியாவின் பதில், "பகவான்தான் இந்த உலகில் இல்லையே". "ஓ, அப்படியா சொன்னாள்" என்று கேட்டு ஸ்ரீ பகவான் நிமிர்ந்து உட்கார்ந்தார். பின் டாக்டர் சய்யது, சிறுமியிடம், "பகவான் இந்த உலகத்தில் இல்லை என்றாயே, அப்படியென்றால் அவர் வேறு எங்கே இருப்பவராம்" என்று. சிறுமி சட்டென பதில் அளித்தாள், "அவர் எல்லா இடத்திலேயேயும் இருக்கார்" இந்நிகழ்வு பகவான் அனுபவித்த ஒன்று (ஸ்ரீ ரமணரும் ஆன்மீகப் பாதையும், பக். 310, 311).*

"அப்பாவுக்குப் பிள்ளை அடக்கம்" என்று பகவான் சொன்னதின் உண்மைக் கருத்தை இங்கு ஆராய்வோம். ஒரு ஞானியானவன், எப்பொழுதுமே தன் பிரும்ம ஸ்வரூபத்தை அந்தர்முகமாக அனுபவித்துக் கொண்டு ஆத்மாராமனாக இருப்பான். சில சந்தர்ப்பங்களில் லோக க்ஷேமத்திற்காக தன் ஞான நிலையினின்று சிறிதும் வழுவாமல், ஈஸ்வரனிடம் நிஷ்காம்ய பக்தி செய்வான். ஞானி தன்னிடம் பக்தி செய்வதை கீதாசார்யன் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறான்.

*"ஆர்த்தீ ஜிஞ்ஞாஸு அந்தார்தீ ஞானீ ச பரதர்ஷப*

*- (ஸ்ரீமத் பகவத்கீதை அத். 7; சுலோ. 16)*

ஸ்ரீமத் பாகவதத்திலும் இதே கருத்து கூறப்படுகிறது.

*"ஆத்மா நாமாஸ்ச முனய: நிர்க்ரந்தா அபி*
*உருக்ரமே; குர்வந்தி அஹைதுகீம் பக்திம்"*

*- (ஸ்ரீமத் பாகவதம், ஸ்க1, அத்.7, சுலோ. 10)*

அப்படிப் பராபக்தி செய்யும்போது ஞானி ஈசனுக்கு அடக்கம்போல் தோன்றும். ஸ்ரீசுகாசார்யாள் பிறவி ஞானி. ஆயினும், 7 நாட்கள், உணவு, நீர் இன்றி பரீக்ஷித்திற்கும், அவர் மூலம் அங்குக் கூடியிருந்த சாதுக்களுக்கும் ஸ்ரீமத் பாகவத அம்ருதத்தைப் பருகச் செய்தார். சுகருக்கு இதனால் கிடைத்தது ஒன்றும் இல்லை. ஆனால் பரீக்ஷித் அடைந்தது மோக்ஷம். நமக்குக் கிடைத்தது பாகவதம். இதுவே லோக க்ஷேமம்.

*பாகவதம் சொல்லத் தொடங்குமுன், சுகர், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை தியானம் செய்கிறார். ("பிரஸிததாம் மே பகவான் சதாம், ஸ்க.2, அத். 4, சுலோ. 20) 10-வது ஸ்கந்தத்தில் 90-வது அத்யாயங்களில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அப்பாவாகவும் தோன்றுகிறார்கள். "பிள்ளை (ஞானியாகிய சுகர்), அப்பா (ஈஸ்வரனாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா)வுக்கு அடக்கம்" என்ற எண்ணம் உண்டாகிறது. ஆனால், உண்மையில் சுகர்தான் கண்ணன், கண்ணனே சுகர். இதைப்போல் தான், ஞானியாகிற ரமணர் தன்னைப் பிள்ளையாகவும், அங்கு எழுந்தருளிவந்த அருணாலேஸ்வரரை அப்பாவாகவும் உருவகப் படுத்தித்தான், "அப்பாவுக்குப் பிள்ளை அடக்கம்" என்று சொன்னார். ஞானி, சர்வேஸ்வரனுக்கு அடக்கம்போல் தோன்றுவான் (சூரிநாகம்மா, ஸ்ரீரமணாஸ்ரமத்திலிருந்து கடிதங்கள், பக்கம் 2, 2005).*

*ஆயினும் இது தோற்றம்தான். உண்மையில் ரமணரும் ஈஸ்வரனும் ஒன்றே.*

*இங்ஙனம், ஸ்ரீரமண பகவான் உண்மைப் பொருளாக, ஸ்வயம் பிரகாசிக்கும். சித் எனும் உள்ள உணர்வாக, எல்லையில்லா ஆனந்த சாகரமாக அங்கிங்கெனாதபடி, பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரமன். எங்கும் ரமணரே; எப்போதும் ரமணரே; எதிலும் ரமணரே. அவர் இல்லா இடம் காலம், பொருள் இல்லை. ஸர்வம் ரமண மயம். நம் அனைவரின் இதயக் கோவில்களிலும் சத், சித், ஆனந்த ஸ்வரூபமாக, நாம் அனைவரும், அந்த ஆத்மா ரமணனின், என்றும் வற்றாத, கருணாரஸம் நிரம்பிய ஆனந்தாமிருதத்தை அருளை வேண்டுவோமாக.*



# மனித குலத்தை நேசித்த விஞ்ஞான ரிஷிகள்

**பாமதிமைந்தன்**

இறைவனே இயற்கையாக நிற்கும் வானளாவிய விருக்ஷங்கள் கொண்டது நைமிசாரண்யம்.

அங்கே தவாக்னியில் ஜொலிக்கும் பரத்வாஜ மகரிஷியின் ஆசிரமம் உள்ளது.

நதிக்கரையில் பல ஆசிரமங்கள், அவை பரத்வாஜரின் சீடர்கள் பயிலும் வித்யாலயங்கள். ஒரு குடிலின் வாசலில் சீடர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

''நம் குருநாதரின் ஆன்மா, லோகத்திலுள்ள மக்களின் நன்மைக்காகத் தவிக்கிறது. சகோதரர்களே, குருநாதர் தியானிப்பதில் ஒரு முக்கிய செய்தி உள்ளது'' என்றார் பௌத்ததமர் என்ற சீடர் ஓலைச்சுவடிகளைக் கோர்த்தபடி.

ஹோமத்திற்கான சமித்துக்களை அடுக்கியபடி, ''சகோதரரே, அது என்ன?'' என்றார் தர்க்கருசி.

''தர்க்கருசி, பிரம்மமே இந்தப் பிரபஞ்சமாக மாறியுள்ளது. பிரம்மத்தின் சிறு சிறு அம்சங்களாக சம்சாரத்தில் ஜீவர்கள் உள்ளார்கள். அந்த ஜீவர்களை நெறிப்படுத்தினால் அவர்களும் மேம்பாடு அடைவார்கள்.''

''ஆமாம், இது நம் குருதேவர் கூறுவதுதானே!''

''பாவாதீதா, இதை வாசித்தால் மட்டும் போதுமா? அதை உணர்ந்து முழு சத்தியத்தை அனுபவிக்க அந்த ஜீவர்களை உயர்த்த வேண்டும்''.

''பிரிய சகோதரரே, ஜீவர்களை உயர்த்துவதற்கு நம் பரத்வாஜ மாமுனி என்ன செய்து வருகிறார் என்று எங்களுக்கு விளக்குங்கள்'' என்றார் பிருகு.

''பிருகு, இருப்பதெல்லாம் இந்த பூமண்டலமே என ஜீவர்கள் நினைத்து மயங்காமல், இதைவிட சிரேஷ்டமான மண்டலங்கள் பிரபஞ்சத்தில் உள்ளன என்பதைக் காட்டும் 'வைமானிக சாஸ்திரத்தை'யும் நம் குருதேவர் படைத்துள்ளார்.

''அது விமானங்களைப் பற்றி ஆராயும் சாஸ்திரமா சகோதரரே?''

''ஆம் சௌம்யா, போக்குவரத்துக்காக மட்டும் பயன்படும் விமானமல்ல அது. நாடு விட்டு நாடு, ஒரு கோள் விட்டு மற்றொரு கோளுக்குச் செல்லும் விமானங்களை குருதேவர் வடிவமைத்துள்ளார். அந்த

விமானம் உடையாது; தீயால் எரிந்து போகாது; எரிபொருள் தீர்ந்துவிட்டால் சூரியக் கதிர்களாலும் பறக்கும்'' என்றார் பௌத்ததமர் பெருமையாக.

''அப்படியா!'' என்று சீடர்கள் வியந்தனர்.

நதிக்கரையில் தியானித்துக் கொண்டிருந்த பரத்வாஜர் மெல்லக் கண்களைத் திறந்தார். 'மந்த்ர த்ரஷ்டா'வான பரத்வாஜர் தியான நிலையிலேயே மந்திரங்களைப் பிரவாகமாக மொழிந்தார். அவர் செப்பிய வேகத்திற்கு வித்யாபதி என்ற சீடர் அவர் கூறியதை எழுதிக் கொண்டார்.

பரத்வாஜரின் இந்த ஆசிரமத்தில் ஓராயிரம் சீடர்கள், ஒரு விமானத்திலிருந்தபடியே வேறு நாட்டு விமானத்தில் நடப்பதைக் காணவும் கேட்கவும் உதவும் உப கரணங்களைப் பற்றிய ஆயுத சாஸ்திரத்தையும் கற்று வருகிறார்கள்.

அடுத்த ஆசிரமத்தில் ஓராயிரம் பேர் தர்ம சாஸ்திரமும், மற்றொரு ஆயிரம் சீடர்கள் அர்த்தசாஸ்திரமும் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

பிரம்மரிஷி பரத்வாஜர் எல்லா ஆராய்ச்சிகளையும் வழி நடத்தும் மஹாச்சார்யராக விளங்குகிறார்.

அக்கரையில் பல முனிவர்களின் குடில்கள். அங்கு மஹரிஷிகளின் சமாஜத்தின் தலைவர் குடிலில் ஓர் உயர்ந்த ஆசனத்தில், சீடர்களுடன் அமர்ந்திருந்தார். அவரது எதிரே வேள்வியை முடித்திருந்த யாக குண்டம். மனதை மேம்படுத்தும் யாகப் புகை இன்னும் அடங்கவில்லை.

ஆறேழு முனிவர்கள் தமது பிரிய சீடரான பரத்வாஜரைப் பற்றிப் பேச வந்திருப்பதை எண்ணி மகிழ்ந்த தலைமை முனிவர், ''பிரம்மநிஷ்டர்களே, எதைத் தெரிந்துகொண்டால் எல்லாம் தெரிந்து கொள்ள

முடியுமோ, அதைத் தெரிந்துகொண்டவராக நம் பரத்வாஜர் விளங்குவது நமது சமாஜத்திற்கே கௌரவம்....'' என்றார் அகம் மலர.

வந்திருந்த முனிவர்கள் அவரது மகிழ்ச்சியில் பங்கு கொண்டனர். பிறகு மெல்ல, ''ஹே பிரம்மவித்தமரே, நாங்கள் வந்திருப்பது பரத்வாஜ மகரிஷியின் விராட் ஆய்வு பற்றி உங்களிடம் பேசத்தான்'' என்றார் ஒருவர்.

''ஏன் பெருமக்களே, நம் மகரிஷி பல அரிய கருவிகளையும் பல்வேறு புதிய துறைகளில் சிந்தித்துப் பல விஞ்ஞான உண்மைகளையும் தரிசித்து வருகிறாரே. அவை மக்களுக்குப் பயனுடையவையாக உள்ளனவே... ?''

முனிவர்களுள் ஒருவர், ''பிரம்மசிரேஷ்டரே, புலன்களுக்கான வசதியான விமான சாஸ்திரமும் இன்னும் பல விஞ்ஞான வித்யைகளும் நம் பரத்வாஜரின் மாபெரும் பங்களிப்புகள்தான்....'' என்பதற்குள், அடுத்த ரிஷி, ''நிச்சயமாக, அவரது அந்த மேதாவிலாசத்திற்கும், ஆன்ம முதிர்ச்சிக்கும் தக்கபடி, அவருக்கு இளம்வயதிலேயே 10,000 வித்யார்த்திகளும் சீடர்களும் உள்ளார்கள்'' என்றார் வேகமாக.

முனிவர்களுள் பெரியவரான ஒருவர், ''குருவே, அடியேனை மன்னியுங்கள். பரத்வாஜர் அபாயகரமான போர் ஆயுதங்கள் பற்றியும் ஆராய்ந்து வருகிறார். நம் நாட்டைக் காக்க அது இன்று அவசியமாகத் தோன்றலாம்; ஆனால் உலகைக் காக்கும் பொறுப்பும் ஆன்மிகவாதிகளான நமக்கு உள்ளதல்லவா? அதையும் நாம் யோசிக்க வேண்டும்'' என்றார்.

அடுத்த முனிவர், ''பக்குவப்படாத மன்னரின் கையிலோ, சுயநலமான வியாபாரிகளிடமோ அந்த ஆயுதங்கள் சென்று சேர்ந்தால், ஆயுத வியாபாரமே பெரிய தொழிலாகிவிடுமே ?'' என்று கேட்டார்.



*அதுவரை வீசி வந்த தென்றல் சற்று நின்றது.*

*''ஆச்சார்யரே, வெகு தூரத்திலுள்ள நபருடன் தொடர்பு கொள்ளலாம், அங்கு நடப்பதை இங்கிருந்து பார்க்கலாம். இவை யாவும் பரத்வாஜரின் தியான சித்தியால் விளைந்தவை. ஆனால்...,'' என ஒரு முனிவர் கூறுவதற்குள் அடுத்தவர்,*

*''மகோத்தமரே, இவை போன்ற விஞ்ஞானக் கருவிகள் மனிதனுக்குச் சுகத்தைத் தரலாம். இந்தச் சுகங்கள் மனிதனை வசதியான வாழ்வுக்கு இட்டுச் செல்லலாம். ஆனால், அவனது பாரமார்த்திகச் சிந்தனைக்கு நிச்சயம் பங்கம் விளைவிக்கும். இவ்வுலக இன்பங்களே போதும், பரலோக பிராப்தி வேண்டாத ஒன்றாகிவிடும். தெய்விகத்திலிருந்து மனிதனின் கவனம் திசை திரும்பி அவன் பசு நிலையிலேயே உழல்வானே...?'' என்றார்.*

*எல்லாவற்றையும் கேட்ட தலைமை முனிவர் மெல்லக் கண் மூடினார். நடப்பதையும் நடக்க இருப்பதையும் தம் நெஞ்சத்து அறிவால் கண்டார்.*

பிறகு அவர், ''முனிவர்களே, நீங்கள் உரைத்ததெல்லாம் உண்மையாகிவிடும்போல் தெரிகிறது. இருந்தாலும் பரத்வாஜரின் ஆராய்ச்சி அரிதானதாயிற்றே....?'' என்றார் மெல்ல.

''ஆம் தபோநிஷ்டரே, அது அரிதானதுதான். ஆனால் அந்த ஆராய்ச்சியின் விளைவுகள் எதிர்காலத்தில் குருட்டு அறிவிலிக்கும், வறட்டு வேதாந்திக்கும் போய்ச் சேர்ந்தால், அவர்களால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமா? திரும்பத் திரும்ப இந்திரிய வசதிகளையும், சுகங்களையும் அனுபவித்து அனுபவித்து ஜனங்கள் ஜனன மரண சுழற்சியிலேயே தேங்கி விடுவார்களே?

''தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற கிரமத்தை மறந்து, நடு இரண்டில் மட்டும் நின்று விட்டால், அது மனிதகுலத்திற்கு மஹதி நஷ்டம்'' என்று அந்த முனிவர் ஆத்மார்த்தமாக உரைத்தார்.

பிறகு கைகூப்பியவாறு தலைமை மகரிஷியிடம், ''ஹே பிரம்மவித்தமரே, பிரம்மஸ்ரீ பரத்வாஜர் யாத்த 'மந்திர மகார்ணவம்' என்ற மந்திரபரமான கிரந்தம் கூறும் ஆராய்ச்சிகளின் விளைவுகள் மக்களைச் சென்றடையக் கூடாது; அது போன்ற ஆய்வின் பலன்களால் உருவாகும் உபகரணங்களைப் படைக்க நம் மாமன்னர் நிதியுதவி வழங்காமல் இருக்க வேண்டும். இது எங்களது விண்ணப்பம்'' என்று கூறி குருதேவரை வீழ்ந்து வணங்கினர்.

மனித குலத்தின் மீதான முனிவர்களின் பொறுப்பான சிந்தனையைக் கண்டு குடிலில் கிளிகளும் குரலெழுப்பி ஆர்ப்பரித்தன; ஆமோதித்தன.

சற்று நேரத்திற்குப் பிறகு தலைமை மகரிஷி தொண்டையைக் கனைத்தபடி, ''பெருமக்களே, மக்களின் ஆன்ம முன்னேற்றத்தின் மீது உங்களுக்குள்ள மெய்யான பொறுப்பைக் காட்டினீர்கள். இது போன்ற

ஆராய்ச்சிகள் தொடரட்டும்; ஆனால் லௌகீகத்திலேயே மனிதனைப் பீடித்து வைக்கும் அந்த ஆராய்ச்சிகளினால், எதிர்காலத்தில் வரக்கூடிய கொடுமையான பலன்கள் ஜனங்களைத் தொடாமலேயே இருக்கட்டும்'' என்றார்.

''ஆம் குருவே, நமது மாமன்னரின் செவிகளுக்குத் தாங்களே இதைச் சேர்க்க வேண்டும்.''

''ஆகட்டும். ஆனால் தசரதர் மறைந்து, ராமர் வனம் ஏகி, அவரைத் தேடி பரதனும் நம் கானகத் தின் பக்கமாக வருகிறாராம்'' என்றார் அவர்.

''ஆமாம் குருவே, இன்று இரவு பரதர் தமது பரிவாரங்களுடன் வனத்தில் தங்கிவிட்டு நாளை சித்ரகூடத்திற்குச் செல்வதாக அறிகிறோம்''.

''நல்லது. இறைவனின் திருவருளால் இன்றிரவே பரதனைச் சந்தித்து, உங்கள் கருத்துகளைக் கூறி வாருங்கள்''. முனிவர்கள் விடைபெற்றனர்.

''என்ன, முனிவர்கள் என்னை வந்து சந்திப்பதா! கூடாது. நானே அங்கு செல்கிறேன்'' என்றார் ராமரஹிதமான பரதர் பெரும் சோகத்தின் நடுவிலும்.

இரவு. தியானம் செய்யும் சித்தர்களால் கானகம் வானகமானது.

முனிவர்களின் குடிலுக்கு விரைந்த பரதர், அவர்களது பாதம் பணிந்தார். தனக்கு ராமரின் அருள் கிடைக்க வேண்டும் என அவர்களிடம் வேண்டினார். முனிவர்கள் பரதனது சகோதர பாசத்தை மெச்சினார்கள். முடிவில் ரிஷிகள் தாங்கள் பரதரிடம் பேச வேண்டியதைப் பேசினர்.

பரதரோ, ''பூஜனீயர்களே, மகரிஷியிடம் இது பற்றிப் பேச எனக்குத் தகுதியில்லை. மேலும் வேறு எதுவும் பேசும் மனநிலையிலும் அடியேன் இப்போதில்லை; ராமச்சந்திரபிரபு கானகத்திலிருந்து இன்னும் ஓரிரு

நாட்களில் நிச்சயம் அடியேனோடு நாடு திரும்புவார். அப்போது அவரே பரத்வாஜ மகரிஷியிடம் இது பற்றிக் கூற முடியும்'' என்று நம்பிக்கையுடன் கூறினார்.

பரதருடன் வந்திருந்த வசிஷ்ட மகரிஷியும், ''ரிஷிகளே, உங்களது உயர்ந்த எண்ணம் நிச்சயம் ஈடேறும். ஓர் அரசன் தன் நாட்டு மக்களுக்கு அறிவும் பாதுகாப்பும் நம்பிக்கையும் வழங்க வேண்டும். மக்களுக்கு உழைப்பு தர வேண்டும். எதையும் இலவசமாகத் தரக் கூடாது; அதிக வசதிகளை மட்டும் தந்து அவர்களது சிந்தனா சக்தியையும், உழைப்பையும் வீரியத்தையும் வீணடிக்கக்கூடிய எதற்கும் அவன் உதவக் கூடாது. மக்களுக்கு வேண்டியது சாந்த சௌக்கியமே, அசாந்த சௌகரியம் கூடவே கூடாது'' என்றார். பரதர் புறப்பட்டார்.

விடிந்தது. முந்தைய இரவு முனிவர்கள், தமது ஆராய்ச்சி குறித்து உரையாடியது பரத்வாஜரின் தியானத்தில் அப்படியே காட்சியாக மலர்ந்தது.

தாம் ஆராயும் விஞ்ஞான, மெய்ஞ்ஞான சிந்தனைகளை மற்ற ரிஷிகள் வேறு கோணத்திலிருந்து எவ்வாறு காண்கிறார்கள் என்பதை அறிந்த பரத்வாஜருக்கு வருத்தம் மேலிட்டது.

மனிதகுல மேம்பாட்டுக்காகப் பொறுப்பாகச் சிந்திக்கும் அந்த மகரிஷிகள் கூறுவதும் சத்தியம்தானே என்று நீண்ட நேரம் சிந்தித்தார்.

பரத்வாஜர் தமது பாவனா சக்தி மூலம், தமது காலத்திலிருந்து வருங்காலத்தில் எவ்வளவு அதிகமாக ஆழ்ந்த கவனத்தைச் செலுத்த முடியுமோ, அந்த அளவிற்குச் செலுத்தினார். வருங்காலத்தில், பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் நடக்கப் போவதை 'திரிகால ஞான திருஷ்டி'யில் கண்டார்.

*காலச் சக்கரம் வேக வேகமாகச் சுற்றி நேராகப் பரபரப்பான கலியுகத்தில் வந்து நின்றது.*

*கலிகால மனிதன் ஓரிடத்தில் ஒரு சிறு கருவியைக் கையில் ஏந்திக் கொண்டே ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பவரிடம் பேசுகிறான்; சுற்றிலும் நடப்பதை மறந்து பேசிக் கொண்டும் காதால் கேட்டுக் கொண்டேயும் இருக்கிறான்.*

*தூர தேசத்திலிருந்தபடி இங்கு நடப்பதை அவன் ஒரு பெட்டி முன்பு அமர்ந்து வண்ணக் காட்சிகளாகப் பார்க்கிறான்; பிறகு அது பற்றியே மேன்மேலும் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருக்கிறான்.*

*இளைஞர்கள் பேசும் கருவி, கேட்கும் கருவி, பார்க்கும் பெட்டி... அவ்வளவு ஏன் விளையாடக்கூட வெளியில் செல்லாமல், ஒரு கருவி முன்பு மணிக்கணக்காக விளையாடும் சிறுவர்கள், சிறுமிகள் என்று எல்லோரும் படுசோம்பலாக இருந்தனர்.*

*ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதும், அன்போடு பேசிக் கொள்வதும் குறைந்து அன்பற்ற அல்ப ஆத்மாக்களாக மாறிவந்தனர்.*

*அங்கு செய்திகள் குவிந்தன; சிந்தனைகள் சிதைந்தன. அன்பு தேய்ந்தது; வறட்டு அறிவு, ஆட்டம் போட்டது அட்டகாசமாக.*

*கலிகால மனிதனை பரத்வாஜர் தமது ஞானதிருஷ்டியால் மேலும் கூர்ந்து நோக்கினார்.*

*ஒரு பொத்தானை அழுத்தினால் விமானம் புறப்பட்டது. பரத்வாஜர் மகிழ்ந்தார்.*

*மறு பொத்தானை அழுத்தினால் வெகு தூரத்துக் காட்சிகளை மனிதன் பார்த்து ரசித்தான்; கேட்டு அனுபவித்தான்; பேசி வம்பளந்தான். அப்போதும் அவர் மக்களின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தார்.*

ஆனால்...., சட்டென்று பரத்வாஜரின் தியானத்தில் ஒரு காட்சி பரபரப்பாக விரிந்தது. ஒரே ஒரு பொத்தானைத் தட்டியதும், எட்டே நிமிடத்தில் பூலோகமுமே பஸ்பமானது!!!

ஓ! ஐயோ இது நடந்துவிட்டால்....,

பரத்வாஜர் திடுக்கிட்டு எழுந்தார். அவர் சிந்தித்தார் - மந்திரங்களைப் பற்றியல்ல; முதிராத மனித மனங்களைப் பற்றி!

பிற்காலச் சந்ததியினரின் அசுர வேக அறிவு முதிர்ச்சியைப் பற்றியல்ல; வளர்ச்சியைப் பற்றி!

இவை போன்ற தமது ஆராய்ச்சிகளால் எதிர்காலத்தில் சாத்தியமாகக்கூடிய விளைவுகள் - நன்மைகள் மக்களுக்குப் போய்த்தான் சேர வேண்டுமா?' என்று ஆழ்ந்து யோசிக்க ஆரம்பித்தார்.

திடீரென அவருக்குள் இருந்த ஆராயும் திறன் ஒரு கேள்வி கேட்டது:

'பரத்வாஜரே, நீங்கள் கண்டுபிடிக்காவிட்டாலும் இந்தக் கண்டுபிடிப்புகளுக்கான கரு ஏற்கனவே பாவ பிரபஞ்சத்தில் வெளிப்பட்டுவிட்டதே....?'

அதற்கு பரத்வாஜர், 'அந்த விஞ்ஞான கருக்கள் யாவும் பாவ பிரபஞ்சத்திலேயே இருக்கட்டும். பிற்கால மனிதன் யார் வேண்டுமானாலும் அதைக் கண்டுபிடித்துக் கொள்ளட்டும். ஆனால் கலியுகத்தில் வரப் போகிற பெரும் கொடுமைகளை அதற்கு முன் யுகங்களிலேயே வெகு சீக்கிரம் கொண்டு வருவதற்கு என்னால் முடியாது' என்றார்.

மேலும் பரத்வாஜர், 'எங்களது கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளெல்லாம் மனத் தூய்மை அடைந்த மெய்ஞானிகளால் படைக்கப்பட்டவை;

எதிர்கால மனிதனோ, மனதைப் பண்படுத்தாமல் வெறும் எந்திரங்களையும் தகவல்கள் மீதான அறிவையும் வைத்துக் கொண்டே விஞ்ஞான கண்டுபிடிப்புகளைக் காணக்கூடியவன்.

'ஆதலால், மனிதன் முதலில் தன்னை ஆன்மாவில் ஸ்திரப்படுத்திக் கொள்ளட்டும்; பிறகு, இவை போன்ற ஆராய்ச்சியின் பலன்கள் அவனை அடையட்டும்; அதற்கு முன் அவை அவனுக்குப் போய்ச் சேர்ந்தால் அவன் தனது அழிவைத் தானே தீவிரமாகத் தேடிக் கொள்வான். அதனால் அவை அவனுக்கு வேண்டாம். அவை ரகசியமாகவே இருக்கட்டும்.'

இவ்வாறு முடிவெடுத்த பரத்வாஜர் தமது ஆசனத்திலிருந்து எழுந்து ஆச்சார்யரின் குடிலை நோக்கி நடந்தார்.

*[நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்]*

# இனிவரும் திருநாட்கள் - 2014

| | | | |
|---|---|---|---|
| ஜூலை | 9 | புதன் | பசு லட்சுமி தினம் |
| | 12 | வெள்ளி | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | திங்கள் | அருணை விஜய தினம் |
| | 25 | வியாழன் | நவராத்திரி தொடக்கம் |
| அக்டோபர் | 2 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 4 | சனி | விஜயதசமி |
| நவம்பர் | 26 | புதன் | கார்த்திகை தீப விழாத் தொடக்கம் |
| டிசம்பர் | 5 | வெள்ளி | கார்த்திகை தீபம் |

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீ பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

எதனிடையின் மூன்றுவித தேக மில்லை
யெதனிடையின் மூன்றுவித வவத்தை யில்லை
யெதனிடையின் மூன்று வித சீவ ாில்லை
யெதனிடையின் மூன்றுவித தாப மில்லை
யெதனிடையி லைந்துவித கோச மில்லை
யெதனிடையி லவையினபி மானி யில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யனவரதஞ் சுகித்தி ருப்பாய். [26/21]

எதனிடையி லறிவுற்ற பொருளே யில்லை
யெதன்பிடையி லாவரண சக்தி யில்லை
யெதனிடையில் விதன்விதமாம் பேத மில்லை
யெதனிடையில் விட்சேப சத்தி யில்லை
யெதனிடையிறி பின்னுமொள சத்தி யில்லை
யெதனிடையிற் பிரபஞ்ச மயலே யில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யனவரதஞ் சுகித்தி ருப்பாய். [26/22]

*[ஆன்ம போதம் - பாடல் 35 - பொழிப்புரை (கனகம்மா)] நான் காயத்தைப் போல யாவற்றினுள்ளும் புறமும் வியாபித்து உள்ளவனும், மரணமில்லாத சனாதனனும், கீழ்மேல் நடுதிகோர் சிறிதுமின்றி எங்கும் சமமாக இருப்பவனும், என்றுமுள்ள சித்தனும் ஆவேன். ஸ்தூல சூட்சும காரண சரீரங்களிலிருந்தாலும், அவற்றின் பற்று இல்லாதவனும், எதனாலும் பற்ற முடியாததினால் நிர்மலமானவனும், எங்கும் நிறைந்திருப்பவனாதலால் சலிக்க முடியாதவனும் ஆவேன் என்று அறிவாய்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்கம் 165-66 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: கனவில் இத்தூல வடிவினும் வேறாய்த் தோன்றும் ஒருடலே சூக்ஷ்ம சரீரமென வழங்கப்படும்.*

*ஸ்ரீ பக: இப்போது இவ்வுடலில் இருந்துகொண்டு கனவில் தோன்றுவது சூக்ஷ்ம சரீரம் என்கிறோம். கனவின்போது அதை எவ்வாறு கருதினோமா? அப்பொழுது சூக்ஷ்ம சரீரமென வழங்கப்படுவது கனாக்காலத்தில் வாஸ்த்தவமாகவே இருந்தது; அவ் அந் நிலையிலிருந்து தூல உடல் கனவுடல் நிகரே. அந்நிலைமைகளில், அதுவது உண்மையாகவும், மற்றது இல்லாததும் ஆகிறது. ஆகவே ஸ்தூலம் சூக்ஷ்மம் யாவும் முடிவில் மனோமயமே.*

*[ஆன்ம போதம் - பாடல் 14 - பொழிப்புரை (கனகம்மா)] ஆரம்பமாகிய தொடக்கமில்லாததும், இன்னவிதமானதென்று சொல்ல முடியாத, அனிர்வசனீயமான வித்தை (மாயை) காரண சரீரமென்று கூறப்படுகிறது. ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்று சொல்லப்பட்ட அந்த மூன்று சரீரங்களினின்றும், வேறாக உபாதியற்ற நிருபாதிகமான ஆன்மாவை அறிந்திடுவாய்.*

*[விவேக சூடாமணி - பக்.42 - பதிப்பு 1999] திரிகுணங்களோடும் கூடின அந்த அவ்வியக்த சக்தியே ஆத்மாவின் காரண தேகம்.*

*[ஒப்பு-ஸ்ரீ அருணாசல அஷ்டகம் - பாடல் 6- 'உண்டு ஒரு பொருள் அறிவொளி உளமே நீ; உளது உனில் இலது இலா அதிசய சக்தி'...]*

*சர்வ இந்திரிய மன விருத்திகள் லீனமான சுழுப்தி தன் அவஸ்தை [ஒப்பு- நான் யார் - பக்.1 - பதிப்பு2008- சர்வ வியங்களும் சர்வ தொழில்களுமற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் ஞானமும் நானன்று] தேகம் இந்திரியம் மனம் கங்கார மாதி விகாரமனைத்தும், வியசுகாதிகளும், காசாதி பூதங்களும் மற்றும் வ்யக்த பரியந்த ஜகம் அனைத்துமான அதுவே அனாத்மா. மாயை, தன் காரியமான மஹத் தத்துவம் முதல் தேகம் முடிவாக உள்ள அவ் அனாத்மா, கானல் ஜலம் போல் சத்தாகும் என நீ அறி.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்கம் 88 - பதிப்பு 2000] விழிப்பு, கனவு, சுழுத்தியென்னும் மூன்று நிலைமைகளும் மாறி மாறித் தோன்றுவதும் மறைவதுமாயிருப்பது சத்தியமாகாது. அவை யாவும் மனோமயமே, ஸத்யமாக. அவ்வாறன்றி அம் மூன்றவஸ்தைகள் ஊடும் இடைவிடாது ஒளிர்ந்து கொண்டிருப்பது நிர்விகாரமான ஒரே நானே. அதுவே ஸத்யமெனத்தகும். அந்த நிர்விகார கண்ட சைதன்யத்தை மறைப்பது எண்ணக் கூட்டமாம் மனமே. அவ் விசித்திர மனம் யாதெனக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தால், காலக் கிரமத்தில் அம் மன மறைப்பு அகன்று சுத்த சைதன்யம் பிரதிபந்தமற்று ஒளிரும்.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.283 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: உண்மை யாதெனில், பந்தம் என்பதே அல்ல! விடுதலையே நமது உண்மையான*

*சுபாவம். நாம் எப்போதும் விடுதலை பெற்றவராக இருந்து கொண்டிருந்த போதிலும், நாம் ஏதோ பந்தத்தில் சிக்குண்டவராகவும், பந்தங்களை அறுத்து அவற்றினின்றும் விடுபட (ஆன்மீக நோக்கோடு) கடுமுயற்சி மேற்கொள்கிறோம். ஆனால் முக்தியாம் விடுதலை கிட்டிய பிறகே நமக்குத் தெள்ளத் தெரியவரும்; அடடா! நாம் எப்போதுமே இருந்து வந்ததும், இப்போது இருப்பதுமான ஒன்றை அடைவதற்காகவா இதுகாறும் மூர்க்கத்தனமாய் மல்லுக்கட்டி முயற்சி செய்து வந்தோம்? என்பது கண்டு ஆச்சரியப்படுவோம்! அப்படியானால் எப்போதும் வீடுபேறு நிலையிலேயே இருந்து கொண்டிருந்தும் பந்தப் பட்டவராகக் கற்பனை செய்து கொள்வது ஏனோ என்று கேட்கலாம்.*

*ஒரு உதாரணம் காட்டினால் அது தெளிவுபடும் - அந்தக் கூடத்து மூலையில் ஒருத்தர் தூங்கப் போய்விடுகிறார் - தூக்கத்தில் கனவு காண்கிறார் - மலை மடு, காடு நாடு, சோலை பாலை, கடல் கடந்த கண்டங்கள் எங்கெல்லாமோ சுற்றிப் பயணம் செய்கிறார். சிரமப்பட்டு நாடு திரும்பி திருவண்ணாமலை வருகிறார். ஆய்ந்து ஓய்ந்து ஆச்ரமம் வந்தடைகிறார், இக் கூடத்துள் நுழைகிறார், அதேகணம் கண் விழிக்கிறார். அட இந்த இடத்தை விட்டு எங்கும் நகரவில்லை, எங்கே படுத்தோமோ அங்கேயே தூங்கிக் கொண்டு இருந்திருக்கிறேன்! என்று அறிகிறார். நான் திரும்பக் கேட்பேன்: இந்தக் கூடத்திலேயே இருந்து கொண்டு, நீங்கள் ஏன் மலையையும் மடுவையும் தாண்டி, பாலைவனத்தையும் கடலையும் கடந்து உலகம் சுற்றினீர்கள்? எல்லாம் மனோ மயம் அல்லது மாயை.*

*[ஆன்ம சாக்ஷாத்காரப் பிரகரணம்-பாடல் 46-விளக்க உரை (கனகம்மா)] ஆன்ம நிஷ்டனானவன் பூத பிசாச அக்னி முதலான உத்பாதங்கள் நேர்ந்தால் எதைக் கண்டும் பயப்பட மாட்டான். தனக்கன்னியமாக ஏதாவது ஒன்று*

*இருந்தால்தானே பயப்படுவதற்கு? அவன் நிலை அத்துவிதமாதலால் பயமில்லை. மனதில் குறைபாடற்று நிறைவு உள்ளவன் எல்லாம் உடையவனே. நிலைமை இப்படி இருக்க மனமே இல்லாத ஆத்ம நிஷ்டனை வறுமையோ வளமையோ எப்படி அணுக முடியும்? வியாதிகள் எத்தனை உண்டோ அத்தனையும் தேகத்தைப் பற்றிக் கொண்டுதான் பீடிக்கும். ஆத்ம நிஷ்டனோ தேகாத்ம பாவமற்றவன். ஆதலால் அவனை வியாதிகள் எப்படிப் பற்ற முடியும்?*

*[ஆன்ம போதம் - பாடல் 34 - விளக்க உரை (கனகம்மா)] கர்ம வாசனைகளினால் ஏற்படும் காமக்ரோதாதி கறைகள் மனதைச் சார்ந்தவை. ஆத்மாவாகிய நான் மனமல்ல அதனால் நிரஞ்சனன். என்றும் காலத்தை எத்தனை நீட்டிக்கப்பட்டாலும், அத்தனைக்கும் முன்பும் பின்பும் உள்ள சாசுவதன் அதனால் நித்யன். சரீரத்திற்குத்தான் பால்யம், யௌவனம், முதுமை போன்ற தசைகளில் எத்தனையோ விகாரங்கள் உண்டாகின்றன. நான் தேகமற்றவன் ஆதலால் எனக்கு உருவமில்லை, பரிசுத்தன்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்கம் 6 - பதிப்பு 2000] தூக்கம், விழிப்பு, கனவு என்னும் எல்லா நிலைமைகளிலும் நீ ஒரு விதமாகத்தான் இருக்கிறாய். தூக்கம் என்பது துன்பக் கலப்பில்லாதோர் இன்ப நிலை. குறை உணர்ச்சியும், துக்கமும் விழிப்பு நிலையிலேயே உண்டாகிறது. இரண்டு நிலைமைகளிலும் நீயே இருந்த போதிலும், விழிப்பு நிலையில், தூக்கத்தில் உள்ள இன்பம் மறைந்து துக்கம் தோன்றுவதேன்? மனத்தின் எழுச்சியினாலேயே! மனமே அகந்தையினின்று எழுவது. அகந்தை தூய உணர்வினின்று உதிக்கிறது. அனைத்தின் மூலமாம் தூய உணர்வே - தானாய் நிலைத்திருப்பதே ஆனந்தம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்கம் 32 - பதிப்பு 2004] தூக்கத்தைக் கடந்து இருப்பதும்,*

*தூக்கத்தின்போதும் கனவிலும் நனவிலும் அவ்வந் நிலைமைகளின் குணங்கள் அற்று இருப்பதுமே யதார்த்தமான நான். அவஸ்த்தாத்ரயத்தின் சாக்ஷியாய், அதிஷ்டானமாய், குணங்களற்று இருப்பதே நான் என்னும் ஆத்ம ஸ்வரூபம், என்று இவ்வாறு அந்தர்முக விசாரணையால் அனுபவித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பஞ்ச கோசங்களையும் கடந்துள்ளது ஆத்ம ஸ்வரூபம். அனாத்ம தத்வங்களையும் கடந்துள்ளது ஆத்ம ஸ்வரூபம். அநாத்ம தத்வங்களை நானல்ல என்று ஒதுக்கித் தள்ளியதும் அங்கே விளங்குவது கேவல சச்சிதானந்த ஸ்வரூபமாம் ஆத்மாவே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்கம் 28 - பதிப்பு 2004] நான் என்னும் ஓர் அகந்தை எழுந்து தேகம், இந்திரியங்கள், மனம் என்னும் இவற்றையெல்லாம் சேர்த்துத் தானாயெண்ணித் தடுமாறுகிறது. இத் தடுமாற்றத்தை அகற்றவே பஞ்சகோச நீக்கத்தை வேதாந்தம் கூறுகிறது. அநாத்மாவாம் பஞ்ச கோசங்களையும் அந்தர்முக விசாரணையால் அகற்றவே, நிருபாதிகமாம் யதார்த்த ஸ்வரூபம் தானே தானாய் விளங்கும். யதார்த்த நானே யதார்த்த ஸ்வரூபம், ஆதியந்தமற்று என்றுமுள்ள பரிபூரணம் அதுவே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்கம் 34,35 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: நனவு கனவு என்னும் இரண்டு நிலைமைகளிலும் உலகம் உணரப்படுகிறது; அதாவது, அவியங்களைக் கிரகித்தல், நினைத்தல் என்னும் இருவகை விருத்திகளுக்கு கோசரமாகிறது. நனவு கனவு என்னும் நினைக்குந் தொழில் இல்லாவிட்டால், உலகென்று ஒன்றைக் காணவோ, தன் இருப்பை ஊகிக்கவோ முடியாது. தூக்கத்தில் நினைப்பு இயக்கம் இன்மையால், உலகமெனப்படும் விஷயக் கூட்டம் இங்கில்லை; வெளிப்படும் நினைப்பே உலகத்தின்*

இருப்புக்கு அத்தாட்சி; நினைவின் விரிவே உலகமெனலாம். இவ்வாறே, நினைப்பு மயமாம் மனம் தூக்கத்திலே தனதிருப்பிடத்தில் ஒடுங்கும்போது உலகமும் ஓய்ந்து விடுகிறது. சிலந்திப் பூச்சி தனது உடலினின்றே நூலை உண்டாக்கி இழுத்துக் கொள்வதுபோலவே, மனமும் நனவு கனவுகளில் நினைப்புமயமாம் உலகை உண்டாக்குவதும், தூக்கத்தில் அதனைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதுமாம் இயல்பு உடையது எனக் காண்கிறோம்.

விருத்திகள் அனைத்தின் ஸாரம் அஹம்விருத்தியே; இவ்வஹம் விருத்தி இன்றி, நானென்னும் அபிமானியின்றி, அபிமானமாம் பிற விருத்திகளுக் கிடமில்லை. அஹம் விருத்தியின் விரிவே பிற விருத்திகள். ஆகவே, இருப்பே இயல்பாம் மூல ஸ்வரூபத்தை உணரவேண்டின் எத் தோற்றத்திற்கும் இன்றியமையாத மூலத் தோற்றமாம் அகந்தையின் மூலத்தை நாட வேண்டும்.

[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.166 - பதிப்பு 2004] அந்த அகமுக நாட்டத்தால் பொய்யான நான் எனும் அகந்தை தன் மூலத்தே மறைய, பரிசுத்தமான ஆத்ம சொரூபம் ஒன்றே ஒளிரும்.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்கம் 172 - பதிப்பு 2000] கே: மனமென்பது என்ன? ஸ்ரீ பக: உபாதிகளால் வரையுற்ற மெய்யுணர்வே மன மெனப்படும். உபாதியற்ற பரிபூரணமே நமதியல்பு. உபாதிகள் சூழ்ந்தால் மெய்யுணர்வே வரையுற்ற மனமாய்த் தோன்றுகிறது.

கே:அஞ்ஞான மூட்டமாம் ஆவரணம் நமதியல்பை மறைப்பதேன்?

ஸ்ரீ பக: அஞ்ஞானம், ஆவரணம், மனம், அகந்தை எல்லாம் ஒன்றே. இது யாருக்கென்று பார்த்தால்,

*அதற்கப்பால் என்றும் எதனாலும் மறைவுறாது இடைவிடாது சுடரும் ஆத்ம ஸ்வரூபமொன்றே இலகும்.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.20 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: அகந்தை என்று எதுவும் தனியாகக் கிடையாது என்கிறபோது அது எழுவதாவது! தன் மூலமாகிய வித்தை (ஞானம்) என்பது எது? அதன் மெய்மையை உணராமையே அவித்தை எனப்படுவது. தன்னைத் தானே உணருங்கால் ஞானமும் இல்லை, அகந்தையும் இல்லை; இதைப் பற்றி எழும் பிரச்சனைகளும் துன்பங்களும் சற்றும் இல்லை என்று அறிவோம். அதைத்தான் அகந்தை மறைந்துவிட்டது என்பீர்கள்!*

*[நான் யார் - பக். 8 - பதிப்பு 2008] ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், இவ்வளவையும் அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக் கொண்டிருக்கிறபடியால், நாமும் அகற்கு அடங்கியிராமல், அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று சதா சிந்திப்பதேன்? புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டு போவது தெரிந்து இருந்தும் அதிலேறிக் கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதிற் போட்டுவிட்டுச் சுகமாயிராமல், அதை நமது தலையிற் தாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?*

தொடரும்

# வெங்கிட்டு – ஒரு சகாப்தம்

இந்த 2014 ஆம் ஆண்டு, ஸ்ரீ ரமணாச்ரமத்தை ஒரு வலிமைமிக்க நிறுவனமாய் ஆக்கிய ஸ்ரீ டி.என்.வி அவர்களின் நூற்றாண்டாக அமைந்தது. அக்ஷரமணமாலை நூற்றாண்டிலேயே இதுவும் அமைந்து வருவது மிக்க பொருத்தம்.

1953 ல் ஸ்ரீ டி.என். வேங்கடராமன் ரமணாச்ரமத்தின் மானேஜர் - தலைவர் ஆனார். மகரிஷி மறைவுக்குப் பின் வெறுமையுற்ற நெடுநாள் பக்தர்கள் பலர் ஆச்ரமத்தை விட்டுச் சென்று விட்டனர். புதிய பக்தர்கள் சேர்ந்தாரில்லை. ஆச்ரம நிர்வாகத்தை தம் கைவசம் கொணர பல அணிகள் முயன்ற வண்ணமிருந்தன. இவை போதாதென்று, அரசாங்கமே ரமணாச்ரமத்தை எடுத்து நடத்த உரிமை கோரிற்று. இவரோ அசாதாரணத் துணிவுடனும், உளவலிமையுடனும், இவற்றிற்கும் மேலாக ஸ்ரீரமணர்பால் தாம் கொண்ட அசையா திட நம்பிக்கையுடனும் அந்த நிலைமையைச் சமாளித்தார்.

மகரிஷி மகாநிர்வாணம் அடைந்தபோதும், அதைத் தொடர்ந்தும் எழுந்த விளைவுகளை பகுத்துணர்ந்து வெகு சிறப்பாய் இவர் செயல்பட்ட விதம் மிக மெச்சத்தக்கது. இவரது பணிகளுள் முதன்மையானது ரமணேஸ்வர மகாலிங்கக் கோயில் எழுப்பியதேயாகும். பணி தொடங்குவதற்கு முதற்படியாக புதிய நிர்வாகத்தைப் பற்றி மக்களிடையே நம்பிக்கையூட்டியாக வேண்டியிருந்தது.

கையில் ஒரு பை மட்டுமே ஏந்தி பகவானின் அருளை மட்டுமே பின்பலமாகக் கொண்டு இந்தியா முழுவதும்

*சுற்றுப் பயணித்தார். போதிய நிதி திரட்டினார். இப்பெரும் பணியை திறன்பட நிறைவேற்றி வருகையிலேயே அடுத்தடுத்தெழுந்த வழக்கு விவகாரங்களையும் கவனித்துவர வேண்டி வந்தது.*

*பகவான் விதித்த வழிப்பட ரமணாச்ரமத்தை நடத்திச் செல்லும் இவரது குறிக்கோளுக்குக் குறுக்கே எழும் கஷ்ட நஷ்டங்கள் எவையும் இவருக்கு ஒரு பொருட்டல்ல. ஆச்ரம நலனைக் கருத்தில் கொண்டு தன் மோசமான எதிரியையும்கூட மன்னித்துவிடக் கூடிய மனோபாவம் கொண்டவர். ஆச்ரம உயர்வே இவரது ஸ்மரணை. ஆச்ரம சொத்திலிருந்து ஒரு நயா பைசாகூட அனாவசியமாக செலவழிக்க மாட்டார். கீர்த்தி வாய்ந்த சட்ட நிபுணர்கள் இவருக்காக வழக்காட உடனடியாய் இசைவார்கள். இவரது களங்கமற்ற தன்மையையும் எளிய வாழ்க்கை முறைகளையும் கண்ணுறும் அவ்வழக்குரைஞர்கள் சன்மானம் ஏதும் பெற மறுத்து விடுவார்கள்.*

*இவர் ரமணாச்ரமத் தலைமையைத் தாங்கி வருகிறார் என்றால் தாயுள்ளம் படைத்த இவரது இல்லாள் திருமதி. நாகலக்ஷ்மி அனைத்து விதத்திலும் இவருக்குத் துணைநின்று வந்திருக்கிறார். செட்டிநாட்டில் அவர் கணக்கு வழக்குகளில் தேர்ச்சி பெற்றார். கணிப்பு இயலின் அதிநுட்பங்களை அறிந்துள்ள இவரிடமிருந்து அனுபவம் மிக்க இன்றைய உரிமைக் கணக்காளர்கள்கூட தெரிந்து கொள்ள வேண்டிய பாடங்கள் பலவன. அனைத்து நாடுகள் தழுவிய ஸ்தாபனம் ஒன்றின் தலைமைப் பொறுப்பு சுமற்றும் கடமைகளை செவ்வனே செய்துவர இத்தகைய நுண்ணறிவு மிக்க அவசியம் அன்றோ?*

*1979-80 இல் நடந்தேறிய ரமண மகரிஷி நூற்றாண்டு விழா, ரமணாச்ரம வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது. அதன் பின்னரே ஆச்ரம வளர்ச்சி*

பன்மடங்காய்ப் பெருகிற்று. டி.என்.வி.யின் உற்சாக வெள்ளப் பெருக்கே அவ்விழாக்களின் வெற்றிக்குப் பெருங் காரணம் என்றால் அது மிகையாகாது.

டி.என்.வி யின் வியக்கத்தக்க ஆற்றல் அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தும், நில விற்பனை குறித்துக் கலந்துபேச இன்று சென்னலக்குடியில் இருப்பார். அடுத்தநாள் தேசிய கருத்தரங்கைத் துவக்க பங்களூரில் பிரசன்னமாவார். மூன்றாம் நாள் நிறுவன அமைப்பு சிக்கலொன்றைத் தீர்த்து வைக்க சென்னையில் வந்து குதிப்பார். இப்படியாக பற்பல விஷயங்களில் அவர் காட்டிய அக்கறை வியப்பிற்குரியது. ஆய்ந்து ஓய்ந்து அமைதி நாடும் வயதில் வேங்கடராமனோ ஊக்கமே உருவாய் உடனிருப்போரையும் உற்சாகப்படுத்தி முன்னணியில் நிற்பார்.

ஐந்து கும்பாபிஷேகங்கள் செய்வித்து, ரமண குருநாதரின் இருப்பிடத்தில் 42 ஆண்டுகாலம் சோர்வே கண்டிராத அன்புப் பணிபுரிந்து வந்தது பெரும்பேறு அன்றோ? அப்புனித இருப்பிடத்தை எல்லோருடைய இல்லமாகவும் ஆக்கியவர் வேங்கடராமன்.

ரமண ஞான குருவின் சேவையாகிய கர்மவழி ஒன்றைத் தவிர, ஞான, பக்தி மார்க்கங்களைக் கொஞ்சமேனும் அறியாத ‘வெங்கிட்டு’வின் ரமண உறவுகள் தனித்துவம் வாய்ந்தவை. ரமண விஜய மகிமையில் ஒவ்வொரு ரமண பக்த ரத்தினங்களும் ஒரு ஒரு சகாப்தங்கள். சந்தேகமற ‘வெங்கிட்டு’வின் சரிதம் ரமண விஜய மகிமையில் ஒரு சகாப்தமாகும்.

[ஸ்ரீ ரமணாச்ரம வெளியீடான ஸ்ரீபகவான் பணியில் நூலிலிருந்து...]

# சுவாமி ரமணானந்தா

## ஆகுரா

*ஸ்ரீ ரமணரின் அன்னை அழகம்மை தம் குலம் தழைக்க வேண்டி அருள்புரியுமாறு பகவான் ரமணரை வேண்டியதன்படி பகவானின் சகோதரர் நாக சுந்தரத்திற்கும் மங்களம் அம்மையாருக்கும் 1914 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதியன்று மானாமதுரையில் பகவானின் சிறிய தந்தையாகிய நெல்லையப்பரின் வீட்டில் டி.என்.வி (வேங்கடராமன்) அவதரித்தார். அவரே பிற்காலத்தில் பகவானால் ரமணாச்ரம நிர்வாகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். 42 ஆண்டுகள் ரமணாச்ரமத்தை கட்டிக் காத்து பெரிய ஆல விருக்ஷமாக உருவாக்கினார்.*

*பகவான் பணியில் தனது தகப்பனார் சுவாமி நிரஞ்சனானந்தரின் சேவையை தொடர்ந்த திரு. வேங்கடராமன் அவர்கள் 1953 முதல் 1994 ஆண்டு வரை 42 ஆண்டுகள் மிகுந்த உற்சாகத்துடன் ஆச்ரமத் தலைமையை ஏற்று நடத்தினார். இந்த 42 ஆண்டுகளில் அவர் தைரியத்துடன் எதிர்கொண்ட பிரச்சனைகள் கணக்கில் அடங்கா. பின்னர் தனது மூத்த புதல்வர் திரு. வே.சு. ரமணன் அவர்களிடம் 1994 ஆண்டு நிர்வாகத் தலைமையை ஒப்படைத்ததுடன் சுவாமி ரமணானந்த என்ற பெயருடன் துறவறம் பூண்டார். இன்று ரமணாச்ரமம் வாயிலில் நுழையும் ஒவ்வொருவரும் தனது சொந்த இல்லத்தில் நுழையும் மன சந்துஷ்டி அடையும் வண்ணம் ஒரு சோலை வனமாக அமைத்துக் கொடுத்துள்ளார்.*

*பரந்து விரிந்த ஆச்ரமத்தில் தனது பிற்கால வாழ்க்கை முழுதும் ஒரு சிறிய அறையில் தங்கி ஆச்ரம வளாகத்தையே எப்பொழுதும் சுற்றி வருவதுண்டு. என்போன்ற அடித்தளத் தொண்டர்களை காணும் போதெல்லாம்கூட தாயன்போடு நலம் விசாரிப்பார்.*

*தாம்பரம் ரமண மையத்தில் இருந்து வந்து கொண்டிருந்த என்னைக் காணும்போதெல்லாம் "தாம்பரம் தங்க மாயிடுச்சு" என்று தட்டிக் கொடுப்பார்.*

*சென்னை வரும்போதெல்லாம் இவர் அன்பர்களின் இல்லத்தில் தங்கி அவர்கள் குடும்பத்தில் ஒருவராகவே வளையவருவார். ஒருமுறை தாம்பரத்தில் எனது வீட்டிற்கு வந்திருந்தபோது "என்னடா, சொந்த வீடா?" என்று கேட்டார். "இல்லை சுவாமிகளே, இது பம்பாயில் உள்ள எனது நண்பரது வீடு, (2400 சதுரஅடி பரப்புள்ள இவ்வீட்டில்தான் ரமண சத்சங்கம் நடைபெற்று வந்தது.) டோக்கனாக ரூபாய் 500 மட்டுமே வாடகையாக பெற்றுக் கொள்கிறார்" என்றேன். "அது என்னடா, டோக்கன். அதையும் வாங்க வேண்டாம் என்று நான் கூறியதாக சொல்லு" என்றார். நம்பமாட்டீர்கள்! அவரின் வாக்கு தெய்வ வாக்கு. அடுத்த மாதம் வாடகை வாங்கும் நேரத்தில் எனது பம்பாய் நண்பர், இனி எனக்கு வாடகை கொடுக்க வேண்டாம். ரமணாச்ரமத்திற்கு நன்கொடையாக அளித்து விடவும்" என்றது என்னை வியப்பில் ஆழ்த்தியது.*

*மேலும் எனது மூத்த மகள் பாரதி தனது பள்ளிப் படிப்பை முடித்து பொறியியல் படிப்பிற்காக முயற்சி செய்யும்முன் பகவானிடமும் சுவாமி ரமணானந்தா விடமும் ஆசி பெற வேண்டி திருவண்ணாமலை வந்தோம். சுவாமிகளை வணங்கி எழும்போது "உனக்கு, மாலை கல்லூரியில் பி.எஸ்.சி தான் கிடைக்கும்" என்று ஆசிர்வதித்தார். அதிர்ச்சியில் உறைந்த என் மகளின் கண்கள் பனித்து விட்டன. அதேபோல் பிற்பாடு அவளுக்கு மாலைக் கல்லூரியில் பி.எஸ்.சி பட்டப்படிப்பு தான் கிடைத்தது. ஆனால் அவள் மூன்றாண்டுகள் முடியும் தருவாயிலேயே அவள் பெற்ற 92 சதவீத மதிப்பெண்களை கணக்கில் கொண்டு அவளுக்கு தாம்பரத்தின் அருகிலேயே அவள் விரும்பியபடியே கம்ப்யூட்டர் சம்பந்தமான வேலை கிட்டியது. மேலும் அவளது மேற்படிப்பையும் அந்த நிறுவனமே தனது*

சொந்த செலவில் ஏற்றுக் கொண்டது. பின்னர் அவளை அமெரிக்காவிற்கும் அனுப்பி வைத்தது. அந்தோ! நான்காண்டுகள் பொறியியல் கல்லூரியில் பயின்ற, இருந்த அவளது வயதையொத்த பெரும்பாலோருக்கும் நாடுமுழுவதும் வேலை கிடைக்காமல் போயிற்று. கம்ப்யூட்டர் சார்ந்த தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கள் அரிதாகிய நிலையில் இரண்டாண்டுகளுக்கு பின்னரே அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புகள் அமைந்தன. சுவாமி ரமணானந்தாவின் தெய்வ வாக்கின் அருள் எங்களுக்கு அப்பொழுதான் புரிந்தது. எனது மகள் பின்னர் நல்ல நிலைமைக்கு வந்த பின் தான் கட்டிய புதிய வீட்டிற்கு "ரமணானந்த பவனம்" என்று பெயரிட்டாள். இன்றும் எங்கள் குடும்பத்தினருக்கு பகவானுக்கு அடுத்த படியாக ஸ்ரீ ரமணானந்தா தெய்வமாக விளங்கி வருகிறார்.

ஸ்ரீ ரமணானந்தா அவர்கள் சமையம் வாய்க்கும் போதெல்லாம் ரமணாச்ரமத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் வளர்ச்சிகளை ஒவ்வொன்றாக என்போன்ற ரமண அன்பர்களை அழைத்து விளக்குவார். அவர் என்போன்ற தீனர்களையும் ஒரு பொருட்டாக மதித்து குழந்தை மனத்துடன் பழகும் பெருந்தகையாளர். இறுதி நாட்களில் தான் எங்கு அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதைகூட உற்சாக மனத்துடன் சுட்டிக் காட்டுவார். மகான் சேஷாத்ரி சுவாமிகள், பகவான் ரமண மகரிஷிகள் என பல ஞானிகளின் சமாதி வைபவத்தில் முக்கியப் பங்காற்றிய இப்பெருந்தகையின் சமாதி வைபவத்தில் நானும் பங்கேற்றது எனது பெரும் பாக்கியம். இன்றும் ஆச்ரமத்தில் பிரசாதம் உண்டபின்பே அவரது சமாதியை வணங்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். ஏனெனில் அவர் சமாதி முன்பு வணங்கி நிற்கும்போது "தாம்பரம் தங்கமாயிடுச்சே! சாப்பிட்டாயா?" என்ற அவரது நெகிழ்ச்சி நிறைந்த பரிவுச் சொற்கள் இன்றும் ஒலிப்பதாக உணர்கிறேன்.

# செய்திகள்

## ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை

### சதாபிஷேகம்

*கடந்த 13-6-2014 அன்று ஆச்ரமத் தலைவர் திரு. வே.சு.ரமணன்-திருமதி. சுசீலா ரமணன் ஆகியோரது சதாபிஷேகம் சிறப்பு ஹோமம் மற்றும் பூஜைகளுடன் திரளான பகவான் தொண்டர்கள்சூழ இனிதாக நடந்தேறியது. ரமண அன்பர்கள் தம்பதியர்களை வணங்கி ஆசிபெற்றனர்.*

### தேசூர் – ஸ்ரீ ரமணானந்த மடாலய நூற்றாண்டு வைபவம் மற்றும் கும்பாபிஷேகம் – ஜுன் 2014

*தேசூர் அகிலாண்டம்மாள் 1899 ஆம் ஆண்டு ஆலமரக் குகையில் பகவானை தரிசித்தது முதல் பகவானுக்கும் அவரது அடியார்களுக்கும் பிக்ஷை அளித்து வந்தார். இவர் சேஷாத்ரி சுவாமிகளுக்கும் போளூர் விட்டோபா சுவாமிகளுக்கும்கூட அன்னமளித்து அருள் பெற்றவர். 1914 ஆம் ஆண்டு மஸ்தான் சுவாமியின் உதவியுடன் தனது சொந்த ஊரான தேசூரில் "ஸ்ரீரமணானந்த மடாலயம்" உருவாக்கி நித்திய பாராயணம் மற்றும் ரமண அடியார்களுக்கு மருத்துவ உதவிகளையும் செய்து வந்தார். 1960ஆம் ஆண்டு இவரது தேக மறைவிற்குப்பின் இங்கு இவருக்கு சமாதி ஆலயம் எழுப்பப்பட்டது. இவருக்குப்பின் இதன் நிர்வாகியான சாது சங்கரானந்தரின் சமாதி ஆலயமும் தற்போது இம்மடாலயத்தில் அமைந்துள்ளது.*

*அக்ஷரமணமாலை மற்றும் இம்மடாலய நூற்றாண்டினை யொட்டி மடாலயம் முழுவதுமாக சீர் செய்யப்பட்டு 8-6-2014 அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 7-6-2014 அன்று ரமண அன்பர்கள் அக்ஷரமணமாலை, திருவாசகம் மற்றும் ஸ்ரீரமண சந்நிதிமுறை பாராயணம் செய்தனர். மடாலயத்தின் தற்போதய பொறுப்பாளரான டாக்டர் ரவி குடும்பத்தினர் கலந்து கொண்ட அனைவருக்கும் இடவசதி, உணவு முதலான ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ........ | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ........ | 9940418375 |
| **குரோம்பேட்டை,** *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ........ | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........ | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ........ | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ........ | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ........ | 9486576687 |
| ஓசூர் அசோக்குமார் | ........ | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




சுவாமி ரமணானந்தா - நூற்றாண்டு
26-5-2014



தேசூர் - ஸ்ரீ ரமணானந்த மடாலய
கும்பாபிஷேகம் 8-6-2014

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542



சஷ்டியப்தபூர்த்தி (23-5-1974) அண்ணாமலை அடிச்சாரலில்
மனைவி நாகலக்ஷ்மியுடன் திரு. வேங்கடராமன்.